சிறப்புப் பகுதி

# நாடக அரங்கின் மந்திரக்காரன்

**- ப. ஸ்ரீஸ்கந்தன்**






## பிரான்சிஸ் ஜெனம்!

பொன்னிற மேனி. எந்தப் பாத்திரத்துக்கும் பொருந்தி வரும் உடல்வாகு. நல்ல குரல் வளம். சிறந்த பாடகர். நல்ல நாடகர். மாணவன் போல் வலம் வந்த நாடகப்பே ராசான்.

மேடையில் நடிப்பின் மூலம் மாயாஜாலம் நிகழ்த்திக் காட்டிய மந்திரக்காரன். ஈழத் துத் தமிழ் நாடக அரங்கின் சிம்மாசனம் பிரான்சிஸ் ஜெனம்.

சமூக, சமய, சரித்திர, புராண, இதிகாச நாடகங்களில் ஆரம்பித்துப் பின்னர் கூத் துவகை, நவீன நாடகங்களில் தன் ஆளு மையைச் செலுத்திய ஒரு அரங்கியலாற் றுப்படை.

பெண்வேடங்கள் ஏற்று அரங்கப் பிரவேசம் செய்தவர். அவரை முதன் முதலில் பெண் வேடத்தில் தான் நான் பார்த்தேன்.

என் காலக்கணக்கு சரியென்றால் அப்போது அவருக்கு வயது 24 ஆகவே இருந்திருக் கும். யாழ். கனகரட்ணம் மத்திய மகாவித் தியாலய மைதான அரங்கில் கர்ணன் நாடகம் மேடையேறியது. அன்று கர்ணனும் குந்திதேவியும் சந்திக்கும் காட்சியில் அரங் கம் முழுவதும் குலுங்கி அழுதது இன்றும் நினைவில் உள்ளது. புகழ்பெற்ற பெருங் கலைஞர்கள் பலர் அதில் நடித்திருந்த போதிலும் சிற்பக் கலைஞர் மணியம் மாஸ்டரின் கைவண்ணத்தில் உருவான இரு தேர்களில் வந்து கர்ணனும் அருச்சு னனும் மேடையில் போர் புரிந்தது போன்ற பிரமாண்டமான காட்சியமைப்புகள் இருந்த போதிலும் எங்கள் சுற்றுவட்டாரம் முழுவ தும் குந்திதேவி பற்றியே பேச்சாக இருந்தது.

இவ்வாறு தான் பிரான்சிஸ் ஜெனம் என்ற மாபெரும் கலை விம்பம் என்னுள் பதிந்து போனது. அப்போது நான் சிறுவனாக இருந்தேன். இதன் பின்னர் யாழ்.வீரசிங் கம் மண்டபத்தில் மேடையேறிய 'கந்தன் கருணை' என்ற கூத்துவகை நாடகத்தில் நாரதராகத் தோன்றி ஆட்டங்களில் அசத் தியிருந்தார்.

கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் பகல் இரவுக் காட்சிகளாக அரங்கேறிய 'கூடி விளையாடு பாப்பா' நாடகத்தில் பன்றியாக வேடமேற்று 'சின்ன நல்ல வீடு ஒன்று கட்டுவோமே' என்று பாடி, ஆடி பார்வை யாளர்களை மகிழ்வித்தார்.

மரபார்ந்த அரங்கிலிருந்து நவீன அரங்கு வரை அவர் ஆற்றுப்படுத்திய பாத்திரங் களை நினைத்தால் ஆச்சரியமாக இருக்கும். தான்சார்ந்த கலையின் உச்சத்தைத் தொடும் வகையில் அவரது தேடல் இருந்தது.

அரங்கக் கல்லூரியோடும் திருமுறைக்கலா மன்றத்துடனும் இணைந்து ஒரு பிறவிக் கலைஞனாகத் தன்னை நிரூபித்த நாட்க ளில் அவர் அரியாலையில் குடியிருந்தார். நாவலர் வீதியில் ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகில் அவரது வீடு இருந்தது. என் வீட் டிலிருந்து 300 யார் தூரம். அவரது வீட் டைக் கடந்து செல்லும் போதெல்லாம் பலைக் கோயில் ஒன்றைக் கடந்து செல் லுகிற உணர்வே எனக்கு ஏற்பட்டது.

வீடு கிட்ட இருந்த போதிலும் அவர் எனக்கு எட்டா உயரத்தில் இருந்தார். அவரைப் பார்ப்பதையே பெரும் பாக்கியமாகக் கரு தினேன். அவர் என்னுள் ஒரு ஆதர்ச புருஷராக வீற்றிருந்தார். அவர் ஏராளமான பாத்திரங்களுக்கு அழகு சேர்த்தார்.

நடிப்புக்கு அப்பால் பல நாடகங்களை ஜெனம் நெறியாள்கை செய்துள்ளார். சுண் டுக்குளி மகளிர் கல்லூரிக்காக குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'புழுவாகி மரமாகி', 'தாயுமாய் நாயுமானார்' நாடகங்களையும் வேம்படி மகளிர் கல்லூரிக்காக சங்கிலியன் கூத்து, கொக்குவில் இந்துக்கல்லூரி, புனித பொஸ்கோ பாடசாலை, புனித ஆசீர்வா தப்பர் ஆரம்பப்பாடசாலை என்பன மேடை யேற்றிய பல நாடகங்களையும் இவர் நெறியாள்கை செய்துள்ளார்.

பிரான்சிஸ் ஜெனம் அவர்கள் ஈழத்து நாடக அரங்கிற்கு ஆற்றிய பணிகளுக்காக மட் டக்களப்பு பல்கலைக்கழகம் நடத்திய உலக நாடக தின விழாவிலும், கொழும்பு பல்கலைக்கழகமும் பேராதனைப் பல்க லைக்கழகமும் தனது வருடாந்த விழாக் களிலும் இவரைக் கௌரவித்துப் பெருமை சேர்த்துள்ளது.

இத்தகைய பெருங்கலைஞருடன் பேசிப் பழகவில்லையே என்ற பெரும்துயரம் என் னுள் நீண்ட காலமாக இருந்து வந்தது. 'தாய்வீடு' பத்திரிகையின் ஆழத்து முத் துக்கள் பகுதியில் பதிவு செய்வதற்காக வத்தளையில் தங்கியிருந்த அவருடன் தொடர்பு கொண்டு தாகத்தைச் சற்றுத் தணித்துக் கொண்டேன். நெருங்கிய நண் பர் போல என்னுடன் சிரித்துக் கதைத்துச் சில பாடல்களையும் பாடி மகிழ்வித்தார்.

பத்திரிகையை அனுப்புங்கள் மகள் படித் துச் சொல்லுவாள் என்றார். அப்போது அவர் பார்வையை இழந்திருந்தார்.

அவரை எப்படியாவது சந்திந்துவிட வேண் டும் என்ற எண்ணம் என்னுள் இருந்து. ஒவ் வொரு பயணத்தின் போதும் சந்திக்க முயற்சிப்பேன். தொடர்ந்து தடங்கல்கள் வந்தபடி இருந்தன.

இந்தத்தடவை எப்படியும் சந்திக்க வேண் டும் என்று மனம் சொல்லியது. திரும்பி வருவதற்கு முதல் நாள் வத்தளையிலுள்ள அவர் தங்கியிருந்த மகளின் வீட்டுக்குச் சென்றேன். எனது கஷ்டகாலம் இருநாட்க ளுக்கு முன்னர் தலை அடிபட கீழே விழுந்து பேசமுடியாமல் கட்டிலில் படுத் திருந்தார். பாடச் சொல்லிக் கேட்கலாம், அனுபவங்களைக் கேட்டறியலாம் என்ற எனது எண்ணம் பொய்த்துப் போனது.


எனது பெயரைச் சொன்னேன். நீங்கள் நடித்த கர்ணன் நாடகத்திலிருந்து கூடிவி ளையாடு பாப்பா வரையான பல நாட கங்களைப் பார்த்திருக்கின்றேன், கனடா பத்திரிகையில் உங்களைப் பற்றி கட்டுரை எழுதியிருக்கிறேன். என்றெல்லாம் சொன்ன போது தலையை ஆட்டிபடி ஒரு குழந் தைப் பிள்ளையைப் போல் சிரித்தார்.

'யாழ்ப்பாணத்தில் சண்முகலிங்கம் மாஸ் டர், உருத்திரேஸ்வரன், இசையமைப்பாளர் கண்ணன், கொலின்ஸ், மட்டக்களப்பில் மௌனகுரு சேர் எல்லோரையும் கண்டு விட்டு வருகிறேன்' என்ற போது உணர்வு மேலிட என் கையைப் பற்ற முயற்சித்தார்.

சிறிது நேரம் நின்றுவிட்டு அவரைத் தொட்டு வணங்கி விடைபெற்றேன். ஐந்து நாட்கள் கழிந்து அவர் இறந்து போனார்.

இப்பெரும் ஆளுமையை முழுமையாகப் பதிவு செய்வதைத் தவிர வேறு என்ன தான் எம்மால் செய்யமுடியும்? இதற்காக, குழந்தை ம. சண்முகலிங்கம், A. ரகுநாதன், ஆனந்தராணி பாலேந்திரா, ச. உருத்தி ரேஸ்வரன், சோக்கெல்லோ சண்முகம், க. பாலேந்திரா, ஜோன்சன் ராஜ்குமார், தெளிவத்தை ஜோசப் ஆகியோரை அணு கியபோது அது தங்கள் கடமை எனக்கூறிப் பதிவுசெய்தனர். அவர்களுக்கு நன்றி!


இரு ஆக்கங்களைப் பகிர்ந்த 'கலை முகம்' சஞ்சிகைக்கும் நன்றி.



sriskandan@thaiveedu.com

# தளர்வறியாத் தளர்நிலையாளன்

குழந்தை ம.சண்முகலிங்கம்.
நாடகர், அரங்கக் கல்லூரியின் மூலவர், அரங்கவியலைப் பாடசாலைகளில் பாடம் ஆக்கிய முன்னோடி. தமிழில் அதிகளவு நாடகங்களை (120) எழுதியும் 42 வேற்று மொழி நாடகங்களை மொழிபெயர்த்துமுள்ளார்.



எனக்குப் பத்து வயதிற்கு இளையவர் பிரான்சிஸ் ஜெனம். ஆயினும் நூறு மடங்கு மூத்தவர். தன் பண்பிலும் பயில்விலும் பழகு கலையிலும் அடக்கம் அவரை அமரனாக்கியது. தான் சார்ந்திருந்த கலைத்துறையில் நாடகத்துறையின் அனைத்துப் பயில்துறைகளிலும் அவர் நீண்ட பட்டறிவு பெற்றுப் பண்பட்டு நின்றார். அந்தப் பண்பு அவருக்கு ஆழ்கடலின் அமைதியைத் தந்திருந்தது. அந்த அமைதி அவரது வாழ்வின் அனைத்துத்துறைகளிலும் படர்ந்து பரவிக் கிடந்தது. சில்லறைச் சிறுதிறங்களாலும் சீறிஎழும் சூறாவளியாலும் அவரை எதுவும் செய்துவிட முடியவில்லை, ஆய்ந்து அவிந்து அடங்கிய ஐயனாக அவர் இருந்தார்.

இது எந்தவாறு அவருக்குச் சாத்தியமானது?! அன்றிருந்து இன்றுவரை சிந்தித்துப் பார்க்கிறேன். காரணம் புரியவில்லை... அது, அவரது சுபாவம், இயல்பிலே வந்த இருப்பு, இல்லையேல், மரபுவழிவந்த சந்ததிக்கூர்ப்பாக இருக்கலாம். அது வந்தவாறு எந்தவாறாகவும் இருந்துவிட்டுப் போகட்டும், அது, அவரிடம் இருந்தது, அவரது இயல்பில் இரண்டறக் கலந்திருந்தது. இதுவே அவரது கலை ஆளுமையின் விஸ்வரூபத்தின் 'குளிர்தழலாக' இருந்தது. அவரது கலையின் நயம்படு முழுமையின் ஆதார சுருதியாக இருந்து அவரை வழிநடத்தியது. அதை அவர் உணர்ந்திருந்தாரா? அது வேறு, அவர் வேறு என்றில்லாது அதுவே அவராக, அவரே அதுவாக இருக்கும்போது, பிரித்து நின்று உணர்தல் எவ்வாறு சாத்தியமாகும். 'இயல்பு' என்பது இரண்டறக் கலந்து ஒன்றென நிற்பதல்லவா? இது தவத்தின் பேறு. அத்தவம் அவருக்கு இயல்பிலே வாய்க்கப் பெற்றது. அது தந்த அமைதி, அடக்கம், அவரது கலானுபூதியில் மிளிர்ந்து தொட்டதனைத்தையும் பொன்னாக்கும் 'இரசவாதத்தை' நிகழ்த்தியது.

மேலே கண்டவை, மிதமிஞ்சிய உணர்ச்சிப் பெருக்கால் எழுந்தவை அல்ல. நீண்ட ஆண்டுகளாக நினைந்து நினைந்து பார்த்தும், அவதானித்தும் சிந்தித்தும் வந்த தொரு நெடுந்தொடரின் முடிவு என்றே நான் கருதுகிறேன். அவரையும் அவரது வாழ்வையும் அருகிருந்து அவதானித்த தன் விளைவே இது என இன்று உறுதி படக் கூறுவேன். இந்த எடுகோளினை அதாவது, அவரது இயல்பில் குடிகொண்டிருந்த, தளர்வினை அறியாத தளர்நிலை அது அவருக்குத்தந்த அமைதி அடக்கம், அவாவின்மை என்பன அவரது கலையைப் பதட்டம், எதிர்பார்ப்பு எதுவுமற்ற நிலையில், நிதானமாக நின்று பயிலவும் வெளிப்படுத்தவும் பயிற்றவும் துணைநின்றது என எடுத்துக்காட்டி, கலைபயில்வோர் தம்மை அவர்பால் ஆற்றுப்படுத்த முயற்சிக்கிறேன். உடன் போக்கும் எடுத்தெறிதலும் தனிமனித சுதந்திரத்தின்பாற்பட்டது.

நாடக அரங்கக் கல்லூரியை ஆரம்பித்து நாடகக் களப்பயிற்சிகளிலும் நாடகத் தயாரிப்புக்களிலும் ஈடுபட்டுவந்த காலத்தில், "இப்பயிற்சிகள் மற்றும் தயாரிப்புக் களின் நோக்கம் 'மனிதர்களை' உருவாக்குவதே" என்று தாசீசியஸ் அடிக்கடி கூறுவார். அக்கூற்றின் உள்ளுறைப் பொருளினை எத்தனைபேர் உய்த்துணர்ந்தார்களோ தெரியவில்லை, பிரான்சிஸ் ஜெனம் ஏலவே அத்துணை ஒருவராக இருந்திருக்கிறார் என்பதை இன்று உணர்கிறேன். "மனிதனாய் இரு" என்பதற்குள் அடங்கி இருக்கும் அந்த முழுமையை நாம் உணர்ந்து கொள்வோமாயின் நாம் தொட்டதனைத்தும் துலங்கும் பிரான்சிஸ் ஜெனம் இதற்குச் சாட்சி.

தனது பத்தாவது வயதில் நாடக அரங்கில் ஏறிய பிரான்சிஸ் ஜெனம் ஏறக்குறைய ஐம்பத்தியாறு ஆண்டுகள் பெண்பாத்திரங்கள், ஆண்பாத்திரங்கள் என பல்வகைப்பட்ட 'கதைமாந்தர்களை' மேடையில் நிறுத்திக்காட்டினார். அந்தவாறு அவர் எடுத்து நிறுத்திய எந்தவொரு பாத்திரமும் பார்வையாளரின் அங்கீகாரத்தைக் கவர்ந் திழுக்கத் தவறவில்லை. அத்தனையையும் பார்க்கும் பேறு எனக்குக் கிட்டவில்லை, நான் பார்த்த அத்தனையையும் கொண்டு, ஏனையவையும் நிச்சயமாக அந்தவாறே அமைந்திருக்கும் என உறுதிபடக் கூறுவேன்.

நாடகத்தில் தான் ஏற்கும் பாத்திரங்களை இவர், தன்னுள் தானே படைத்தெடுப்பார். நெறியாளரின் நோக்கினை நிதானமாக நின்று தெளிவாகப் புரிந்து கொண்டு, அவரது எதிர்பார்ப்பு முழுமையாக நிறைவுறும் வகையில், தன் பாத்திரப் படைப்புப் பணியினைத் தன்னுள் பொறுமையா




கப் புடம்போட்டுக் கொண்டு, தேர்ந்த சிற்பி கைப்பட்ட சிலையென அதை மெல்ல உயிர்பெறச் செய்வார். ஒத்திகை நாட்கள் மெல்ல நகர்ந்து செல்லும். ஆரம்ப நாட்கள் சில கடந்தபின், மெல்லப் பிரான்சிஸின் பாத்திரம் உயிர்பெறத் தொடங்கும். அதன் பின்னர், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் அப்பாத்திரம் முழுநிறைவை நோக்கி நகரும். நெறியாளரே தன்னுள் வியக்கும் வண்ணம் பாத்திரம் வளர்ந்து செல்லும். அந்தவாறு வளரும் பாத்திரம் எந்த வகையிலும், எந்த நிலையிலும் தனித்துத் துருத்தி நில்லாது, அந்த நாடகப் பாத்திரக் குடும்பத்துள் இரண்டற இணைந்த ஒன்றாக நிற்கும். இது, தன்முனைப்பும் தன்னெடுப்பும் இல்லாத இவரது பரந்த, சுயனலமற்ற பண்பின் பேறாக விளையும் ஒன்றாக இருக்கும். 'நாடகம் ஒரு கூட்டுக் கலை' என்பதற்கு அது இலக்கணமாக அமையும். ஒத்திகைகள் முடிந்து மேடையேறி, ஆற்றுகைகளும் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர, இவரது பாத்திரமும் கண்ணுக்குப் புலப்படாத வகையில் சிறுசிறு நுட்பங்களைத் தன்னகத்தே புகுத்திக்கொண்டு மெல்லெனநகரும். ஒத்திகைகள் முதல், ஆற்றுகைகள் யாவும் வரை, கூட இருந்து இந்தப் படைப்பாற்றலைப் பார்த்து நயந்தும் வியந்தும் கிடக்கும் பேறு பெற்ற ஒரு சிலரில் நானும் ஒருவன் என்பதில் பெருமை கொள்கிறேன்.

பிரான்சிஸ் ஜெனத்திடம் இருந்த தளர்வும் தளம்பல் இல்லாத அமைதியும் அவருக்கு உளச் சமநிலையைத் தந்திருந்தது. இப்பண்பானது, அனைத்தையும், அனைவரையும் சமமாகப் பார்க்கும் நுண்திறனை, ஞானத்தை அவருக்குத்தந்திருந்தது. இதனால் இவர் வயதில் இளையவர் முதல் முதியவர்வரை எடுத்துரைப்பதை அமைதியோடும் உண்மையான அக்கறையோடும் செவிமடுப்பார். அவர்கள் கூறுபவற்றிலிருந்து, அத்தருணத்தில் தனக்கு வேண்டியவற்றைப் பகுத்தெடுத்து, அடைகாத்து, தன் இதமான வெப்பத்தால், தன் கலைப் படைப்பு என்ற அக்கினிக் குஞ்சினைப் படைத்தெடுப்பார். அச்சுவாலை, அவரது உள்ளச்சமநிலையின் அமைதியின் பண்பில் கிடந்து தோய்ந்து வெளிவருவதால், 'குளிர்தழல்' ஆகிப் பார்வையாளர்தம் உள்ளக்கமலங்களைக் குளிர்விக்கும். அவர்கள் அதனை 'மெய்உணர்ந்து', அதனூடு அதன் மெய்மையை உணர்ந்து அனுபவிப்பார்கள். எவனொருவன் அகத்தில் அவாவினை நீக்கி அமைதியைக் குடிபுகுத்துகிறானோ அவனால், நடிப்பிலும் கலைப்படைப்பிலும் மட்டுமல்ல வாழ்வின் அனைத்திலும் மெய்மையைத் தான் உணர்ந்து, அதைப் பிறர்க்குணர்த்த முடியும். இதுவே, 'தான் பெற்ற இன்பம் பிறர் பெறவைத்தல்' போலும். 'மனிதனை உருவாக்குவோம்' என்று சொன்ன தாசீசியஸும் இதைத்தானே சொல்லியிருப்பார்.

பிரான்சிஸ் தன்னுள் காத்துவந்த 'உளச் சமநிலை' என்பது அவரது அரங்கப் பணியிலும் கலைப்பயில்விலும் எம்மத்தியில் வேறு எவரும் முழுமையாகச்செய்து முடிக்க இயலாது போன முக்கியமான ஒன்றினை, ஆரவாரம் எதுவும் இல்லாது செய்து முடிக்கக் காரணமாக இருந்ததைக் காணக்கூடியதாக உள்ளது. இதனை விரித்துப் பார்த்தல் பயன்தரும்.

கலைகள் யாவற்றிலும் காணப்படுவது போல, நாடகக் கலையிலும் காலத்துக்குக் காலம் தோன்றி, தமது காலத்தில், அடையாளம் காணக் கூடியதாக உள்ள சில இயல்புகளைத் தம்மகத்தே வளர்த்துக் கொண்டு, ஒரு வகையிலான தனி அடையாளத்தினைப் பெற்றுக் கொண்ட கலைகள், தமக்கெனக் குறித்த சிலநாமங்களைப் பெற்றுக்கொண்டன. அந்தவகையில் அமையும் படைப்புக்கள் யாவும் ஒரு வகையுள்/ மோடியுள் /பாணியுள் அமைந்தவை என அடையாளப்படுத்துவதற்காக, பொருத்தமானதொரு நாமத்தை இட்டனர். அந்த நாமம் காரணப் பெயராகவே அமையும். உதாரணமாக, தொல்சீர் /செந்நெறி, மனோரதியவாதம், மிகைப்பாட்டுவாதம் நவசெந்நெறிவாதம், யதார்த்தவாதம் என்றுவந்து, 20ம் நூற்றாண்டிலிருந்து அவை வகைதொகையின்றிப் பெருகி வந்துகொண்டிருப்பதை நாம் காணலாம். அவற்றின் வரவை எவரும் வெறுப்பதற்கிடமில்லை - அவசியமும் இல்லை இருப்பினும் அவை ஒவ்வொன்றினதும் தனிப்பண்பினை /அடையாள இயல்பினை /இயல்நிலை ஒழுங்கினைத் தெளிவாகப் புரிந்துகொண்டு அவற்றில் நாட்டம் இருப்பின் அவற்றைப் பயின்று ஆற்றுகை நிலைப்படுத்தி வருவது பெரிதும் விரும்பத்தக்க ஒன்று. அவ்வாறு செய்ய முற்படுபவர்கள், தாம் பயின்று பயிற்றுவிக்க அல்லது ஆற்றுகைசெய்ய முற்படும் மோடியின் /வகையின் தனித் தன்மையான 'இயல்பினைத்' தெளிவாக அடையாளம் கண்டுகொள்வது அவசியமாகும். ஒவ்வொருவகையினதும் தனி அடையாளங்களை, இயல்பினைத் தெளிவாக இனங்கண்டு வெளிப்படுத்துவது அவசியமாகும். அது சாத்தியமாகும் ஒருவர் தனக்குப் பிடித்த எத்தனை மோடிகளிலும் /வகைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளலாம்.

இந்தவகையில் பிரான்சிஸ் ஜெனம் தனித்துவம் மிக்க ஒருவராக இருப்பதை நாம் இனங்கண்டுகொள்வது அவசியம். எம்மைக்கண்டுகொள்ள எம்பணியினைச் சரியான முறையில் செய்யும் மார்க்கத்தைக் கண்டுகொள்ள இது பெரிதும் அவசியமாகும். துறைசார்ந்த திறனாளர்களை ஆழ்நிலை ஆய்வுக்குட்படுத்தல் என்பதும், அதனை ஐயமற அறிந்துகொள்ளல் என்பதும் நிதானமான, நிலையான வளர்ச்சிக்கு உதவும் உத்தரவாதம் என்பதை எவரும் மறுக்கவியலாது. மறுப்போமாயின் 'தான்தோன்றீஸ்வரர்களின்' பெருக்கம் அதிகரிக்கும்.

பலப்பல மோடிகளில் அமைந்த நாடகங்களில் நடிக்கும் வாய்ப்புப் பிரான்சிஸ் ஜெனத்துக்குக் கிட்டியிருந்தது. பலதரப்பட்ட அண்ணாவிமாருடனும் நெறியாளர்களுடனும் இணைந்து அவர் பணிபுரிந்துள்ளார். நடித்துள்ளார். கலையரசு சொர்ணலிங்கம் முதல் அண்மைக்காலத்து இளம் நெறியாளர்கள் வரை அவரை அரங்கில் பயன்படுத்தியுள்ளனர். பாரம்பரியக்கூத்து வகைகள் மற்றும் அரச நாடகங்கள் முதல் நவீன காலத்தின் யதார்த்தவாதம், அபத்தவாதம், கூத்துப்பாங்குதழுவிய நவீன நாடகங்கள், பாநாடகங்கள், சிறுவர் நாடகங்கள் எனப் பலவற்றிலும் இவர் பங்குகொண்டு நெறியாளரோடு இணைந்து தான் படைத்த பாத்திரங்களை நிமிர்த்தி நிறுத்தியவர். இது சாத்தியமாவதற்கு இவரது பற்றறுத்த மனப் பக்குவத்தால் வந்த 'உளச்சமநிலை'யே காரணமாக அமைந்தது. அந்த மனநிலையானது, ஒவ்வொரு மோடியினதும் 'இயல்புநிலையைக்' கண்டறிய இவருக்கு உதவியது.

வாழ்வினை 'மிகைப்படுத்திக்' காட்டுவது கலையின் இயல்பு. இயல்புநெறிவாத, யதார்த்தவாத வகைக்குள் அடங்குவனவும் இதற்கு விதிவிலக்கல்ல. வகைகளை ஒன்றுடன் ஒன்று ஒப்பிடுகையில், அவை ஒவ்வொன்றும் வாழ்வின் இயல்பு நிலையிலிருந்து மிகைப்பட்டு நிற்பதன் 'அளவு' தெரியும். 'மிகைப்பட்டுநிற்கும் அந்த அளவு' தான் அந்தவகையின் /மோடியின் 'இயல்பு நிலை'யாக இருக்கும். அந்த அளவைக் கண்டு கொண்டு அதைமேவிச் செல்லாமலும், அதை எட்டித்தொடாமலும் இருக்கும் படைப்பு, நயம்படுமாறு இருக்காது, காரணம், அப்படைப்பானது தனது நம்பகத்தன்மையை இழந்துவிடும். பிரான்சிஸ் ஜெனம், தான் பங்குகொண்ட ஒவ்வொரு வகைநாடகத்தினதும் இயல்பு நிலையைத் துல்லியமாகப் புரிந்துகொள்ளும் ஞானத்தைப் பெற்றிருந்தார். அந்தப் புரிதலே, அவர் படைத்த அத்தனை வகைப்பாத்திரங்களையும் நூற்றுக்குநூறுவீதம் இயல்பு நிலையில் நிறுத்திப் பார்வையாளரின் ஏகோபித்த அங்கீகாரத்தைப் பெற்றுநின்றன. இது, அவர் தனது கலைவாழ்வில் அமைதியாக நிலைநிறுத்திச் சென்ற அசுரசாதனையாக உள்ளது. நடிப்பின் இலக்கணம் எனக் கணிக்கப்படும் சிவாஜி கணேசனாலும் இதைச் சாத்தியப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

பத்து வயதில் பெண்பாத்திரம் ஏற்றுத் தனது நாடக நடிப்பு வாழ்வினை ஆரம்பித்த பிரான்சிஸ் ஜெனம் தொடர்ந்து தனது வாழ்வின் வெவ்வேறு பருவங்களில் பல்வகைமையில் அமைந்த பல்வேறு பெண்

தொடர்தல் 85ம் பக்கம்

# சில மனப் பதிவுகள்

- தெளிவத்தை ஜோசப் -

ஐந்தாம் வகுப்பு மாணவனாக சில்லாலை றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் பயிலும் போதே கதாநாயகிப் பெண்பாத்திரமாக மேடையேறியவர் ஜெனம்.

பள்ளிப்பருவம் தொட்டே நாடகத்துறையில் ஈடுபட்டு அதற்காகவே ஒரு அர்ப்பணிப்புடன் வாழ்ந்து மறைந்தவர் திரு. பிரான்சிஸ் ஜெனம் அவர்கள். ஏறத்தாழ 100 நாடகங்களில் நடித்துள்ள இவர் திருமறைக் கலாலமன்றத்துடன் இணைந்து செயற்பட்டவர். தனது அரை நூற்றாண்டு கால கலை இலக்கியம் பயணத்தில் திருமறைக் கலா மன்றத்தின் அரங்கச் செயற்பாடுகள் அளப்பரியவை. அவதானிப்புக்குரியவை. 1965 லிருந்து பக்தி நாடகம், விவிலிய நாடகம், திருப்பாடுகளின் நாடகம், உயிர்ப்பு நாடகம், என்று கத்தோலிக்கப் பின்புலத்தில் தொடங்கிய பயணம் இது.

கத்தோலிக்க மதப்பற்றாளரும், நாடகப்பிரியரும், நடிப்புப் பிரியருமான பிரான்சிஸ் ஜெனத்துக்கு திருமறைக் கலாமன்றத்தில் ஈர்ப்பு ஏற்பட்டதில் வியப்பேதுமில்லை. இவரின் பள்ளிப்பருவ முதல் நாடகமும் ஒரு பைபிள் கதைதான். சில்லாலை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை நாடகமான 'ஜூடித்' என்னும் நாடகத்தில் ஜூடித்தாக பாத்திரமேற்றவர் இவர்.

கல்லூரியின் கட்டட நிதிக்காக கல்லூரி ஆசிரியரால் எழுதப்பட்டு, அண்ணாவி ஒருவரால் மாதக்கணக்காகப் பழக்கப்பட்டு மேடையேற்றப்பட்ட ஒரு விவிலிய நாடகம் ஜூடித். நாடகத்தை எழுதியவர் பாடசாலை ஆசிரியர் சுவாம்பிள்ளை. நாடகம் பழக்கியவர் விளானைச் சேர்ந்த சி.டி.செல்லையா அண்ணாவியார்.

ஜூடித்தாக வேடமேற்க ஜெனம் தெரிவானதும் ஆசிரியரும் அண்ணாவியாரும் ஜெனத்துடன் வீடு சென்று பெற்றோரிடம் அனுமதி பெற்று அதன் பிறகே நாடகம் பழக்கத் தொடங்கியுள்ளனர்.

'அப்பாவுக்கு நாடக ஈடுபாடெல்லாம் கிடையாது. ஆனால் கலையை ரசிக்கும் மனம் இருந்தது' என்பார் ஜெனம்.

'ஜூடித் மேடையேறிய பிறகு அந்த ஊரில் ஒரு கிளுகிளுப்பு ஏற்பட்டது என்று கூறும் ஜெனம் அதன் பின் அந்த ஊரில் மேடையேறிய எல்லா நாடகங்களிலும் பெண்வேடம் எனக்குத்தான்' என்று சிரிப்பார்.

அளவான திரட்சி கொண்ட உடலமைப்பும் அழகிய முகமும் கொண்டவர் ஜெனம். சரளமான அவரது வசன உச்சரிப்பு வல்லமை கொண்டது.

1990ல் தான் ஜெனம் எனக்கு அறிமுகமானார். என்றாலும், 80களிலேயே தனது ஒப்பற்ற நடிப்பால் என்னை ஈர்த்திருந்தார்.

60களில் ஒரு சிறுகதை எழுத்தாளனாக இலக்கிப்பிரவேசம் செய்தவன் நான். சிறுகதைகள் படைப்பதையே முழுமூச்சாகவும் இலக்கியச் செயற்பாடாகவும் கொண்டிருந்த என்னை இலக்கியத்தின் பன்முக வெளிகள் நோக்கி திசை திருப்பிவிட்டவர் திரு. மு. நித்தியானந்தன் அவர்கள்.

1979 டிசம்பரின் எனது நாமிருக்கும் நாடே.. சிறுகதைத் தொகுதியை யாழ்ப்பாணத்தில் வெளியீட்டு விழா நடத்தியமை, எண்பதுகளில் பாலேந்திராவின் யுகதர்கம், மழை, கண்ணாடி வார்ப்புகள் ஆகிய நாடகங்களை பார்க்க வைத்தமை போன்றவை இந்த திசை திருப்பங்களுக்கான சில முக்கிய காரணிகள்.

1981ல் அ. தாசீசியஸ் அவர்களின் 'பொறுத்ததுபோதும்' நாடகம் பார்த்தேன். வரிசையாக நிற்கும் தொழிலாளர்களை ஒரு ஏளனம் கலந்த முறைப்போடு பார்த்தபடி அவர்கள் மத்தியில் ராஜநடைபோடும் சாம்மாட்டியார். வித்தியாசமான ஒரு குலுக்கல் நடை, மின்னொளியில் புலப்படும் அந்த முகபாவம், அதன் பார்வை... மறந்துவிட முடியாதவாறு நெஞ்சில் பதிகிறது. அந்த முகம்..! அவருடைய முறைப்பான பார்வைகண்ட தொழிலாளர்களின் மனங்கள் என்னடா பார்க்கின்றாய் என்று எழுப்பும் மனவோசை பின்னணி இசையாக ஒலிக்கிறது. அவர்களின் மனக்கோஷம் கேளாமல் அதே பார்வை முறைப்புடன் நடை-பயிலும் சம்மாட்டியார்.

சம்மாட்டியாராகவே மேடையில் நின்றவர்தான் பிரான்சிஸ் ஜெனம். தாசீசியசால் பிரதியாக்கம் செய்யப்பட்டு நெறியாள்கை செய்து மேடையேற்றப்பட்ட இந்த நாடகத்தில் கூத்துடன் இணைந்த பாடல்கள் பரவலாக வரும். ஜெனத்தின் கணீரென்ற குரல் பார்வையாளர்களை கட்டி வைக்கும்.

அந்த ஆண்டின் சிறந்த நடிகருக்கான ஜனாதிபதி விருது 'சம்மாட்டியார்' பிரான்சிஸ் ஜெனம் அவர்களுக்குக் கிடைத்த செய்தி மகிழ்ச்சியைத் தந்தது.

அரங்கியலுக்கு அப்பால் சுஹைர் ஹமீட், ஏ. ரகுநாதன் போன்றவர்களின் மேடை நாடகங்களிலும் வானொலி நாடகங்களிலும் ஈழத்துத் திரைப்படங்களான 'நிர்மலா', 'தெய்வம் தந்த வீடு', 'வாடைக்காற்று' என்பவற்றிலும் நடித்திருக்கின்றார்.

பேராசிரியர் மௌனகுருவின் 'சங்காரம்', நா.சுந்தரலிங்கத்தின் 'அபசுரம்', அ. தாசீசியசின் 'பொறுத்தது போதும்', அம்பலத்தாடிகளின் 'கந்தன் கருணை', குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'எந்தையும் தாயும்' போன்றவை இவருக்கும் பெயர் சேர்த்த நாடகங்கள்.

90 களில் திருமறைக் கலாமன்றம் தனது கலை இலக்கியப் பணிகளின் அடுத்தகட்ட விரிவாக கலைமுகம் என்னும் காலாண்டு சஞ்சிகையை கொழும்பிலிருந்து வெளியிடத் தொடங்கியது.

பம்பலப்பிட்டியில் அமைந்திருந்த மன்றத்தின் கொழும்புப் பணியகத்திலிருந்து அம்புரோஸ் பீட்டர் என்னைத் தேடிவந்திருந்தார். கலைமுகத்தின் அடுத்த இதழுக்காக ஒரு சிறுகதை கேட்டு, எழுதித் தருவதாக ஒப்புக் கொண்டேன். எழுதியும் கொடுத்தேன். 'பார்வை' என்ற எனது சிறுகதை கலைமுகம் இதழில் வெளிவந்தது.

கண்பார்வை குறைவடையும் ஒருவனது மன உளைவு பற்றிய கதை அது.

ஒரு பத்துப் பதினைந்து ஆண்டுகளின் பின் திடீரென ஒரு ஞாயிறன்று வத்தளை மாதா கோவில் பூஜை முடிய அவரைக் கண்டேன். இரண்டு இளவயதுப் பெண்கள் கைப்பற்றி அவரைக் கூட்டிவந்தனர். கோவில் என்பதால் மெதுவாகப்பேசி, கை அசைத்து என்னைத் தெரிகின்றதா என்றபடி நெருங்கினேன்.




அவருக்கு கண்பார்வை குறைந்திருக்கிறது. சிகிச்சையில் தவறு நடந்துள்ளது போல் தெரிகிறது. என்று உடனிருந்தவர்கள் கூறினார்கள்.

அருகில் நெருங்கிப்போய் என்னை அடையாளப்படுத்தி வணக்கம் என்றேன். முகம் மலர உரையாடினார். 'இப்போது வெளியில் எங்கும் செல்வதில்லை. நாடகம், நடிப்பு ஒன்றுமில்லை. வாசிப்பே கிடையாது என்று பேசிக்கொண்டே போனார். அருகில் இருந்தவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

எனக்கு எனது கலைமுகம் கதையான 'பார்வை' நினைவிலோடியது. கூடவே கு.ப. ராவின் நினைவும் வந்தது. சிறுகதைத்துறையில் புதுமைப்பித்தனுடன் ஒப்பிட்டு பேசப்பட்ட கு.ப.ராவும் பார்வை இழந்திருந்தார். அவருக்காக அவருடைய கதைகளை அவர் சொல்லச் சொல்ல அவருடைய சகோதரி கு.ப. சேது அம்மாள் எழுதி பத்திரிகைகளுக்கு அனுப்புவார் என்பது வரலாறு. சிகிச்சைக்குப் பிறகு பார்வை பெற்றபின் நிறையவே எழுதினார்.

விடைபெற்று மீண்டும் கோவிலினுள் சென்று மன்றாடி வெளியேறினேன். கு.ப.ராவுக்குப் போல் ஜெனத்துக்கும் பார்வை மீண்டும் வரவேண்டும் என்பதே எனது மன்றாட்டமாக விருந்தது.

அதன் பிறகு அவரை நான் காணவில்லை. அதுவே கடைசியான சந்திப்பு. எப்பிரல் 2017 இறுதியில் யாழ் திருமறைக் கலா மன்றத்தில் இருந்து கலைமுகத்தின் பொறுப்பாசிரியர் செலமர் எமில் எனக்கு தொலைபேசி அழைப்பெடுத்து ஜெனம் காலம் ஆகிவிட்ட செய்தியைக் கூறினார்.

அரங்கியல் துறைக்கான இழப்பு பெரியதே என்றாலும் என் குரலில் பதற்றமோ வேதனையோ இருக்கவில்லை. மனத்துயர் இருந்தது.



theliwathai.joseph@thaiveedu.com

# தளர்வறியாத் தளர்...

84ம் பக்கத் தொடர்ச்சி...

பாத்திரங்களையும் நாட்டுக் கூத்துக்கள், வரலாற்று நாடகங்கள், இலக்கிய இதிகாச புராண நாடகங்கள், யதார்த்தவாத சமூக நாடகங்கள் என்பவற்றில் இளம்பெண், இடைவயது மங்கை, முதுகிழமாது எனப் பன்மைப் பண்பு கொண்ட பாத்திரங்களை ஏற்று நடித்துள்ளார். அவற்றுள் கட்டிளம் அரசியாகவும் பட்டணத்துப் பருவமங்கையாகவும் அவர் பாத்திரமேற்று நடித்தவற்றை ஆற்றுகைகளின் போது பார்க்கின்ற வாய்ப்பினையும், ஔவைப்பிராட்டியாகவும் குந்திதேவியாகவும் அவர் உருவான வரலாற்றை ஒத்திகைகளின் போது கூட இருந்தும், அவற்றின் ஆற்றுகை ஒவ்வொன்றின் போது கூட நின்றும், பக்கத் தட்டியினூடாகப் பார்த்து நயந்தும், வியக்கும் பேறுபெற்றிருந்தேன்.

அவர், கூடுவிட்டுக் கூடுபாயும் 'இரசவாதத்தை' தன் பெண்பாத்திரப் படைப்புக்களுக்குள்ளும் நூறுவீதம் நிகழ்த்திக் காட்டினார். பெண்மையைத் தன்னுள் மெல்லப் புகுத்திக் கொள்ள அவர் எந்த விதத்திலும் சங்கடப்படவில்லை. பெண்மையைப், பெண்ணின் இயல்புநிலையில் நின்று நடிப்பது அவருக்கு எந்தவிதமான தொல்லையையும் தந்ததாகத் தெரியவில்லை. ஏனைய ஆண்கள் பெண்பாத்திரங்களை ஏற்று நடிக்கும் போது வெளித்தெரியும் செயற்கைத்தன்மை, மோடிமைக்குட்பட்டிருக்கும் பாங்கு, இவரது பெண்பாத்திரப்படைப்புக்களில் எள்ளளவேனும் வெளித்தெரியாது. பெண்மையின் பொதுமையான இயல்நிலையையும், குறித்த பெண்பாத்திரத்தின் தனித்துவமான இயல்நிலையையும் அவர் பகுத்தறிந்து தெரிந்தெடுத்துக் கொண்டு தன் பாத்திரப் படைப்பாக்கப் பணியினைக் கச்சிதமாகச் செய்து முடிப்பார். இங்கும் அவரது அவாவின்மையால் வந்து விளையும் அமைதி, நிதானம், தளர்நிலை என்பன அவருக்கு உற்றதுணையாக நிற்பதைக்காணமுடியும்.

ஈழத்து இசை நாடக மோடியில் பெண்பாத்திரத்திற்கு இலக்கணம் அமைத்தவராகச் செல்வம் அவர்களைக் கொள்ள முடியும். அவர் அமைத்துக் கொண்ட பெண்பாத்திரப்பாணி (ஆண்கள் பெண்களாக நடித்துவந்த மரபில்) என்பது, தொண்டு தொட்டு மரபு வழியாக வந்த கோயில் மரபுசார்ந்த ஓவியம் சிற்பம் என்பவற்றினைப் போலச்செய்தலின் பண்பினையே கொண்டிருந்தது. அவற்றில் அழகிருந்தது உண்மை, எனினும் இயல்பை மீறிய தன்மை இருந்ததையும் இருப்பதையும் காணமுடிகிறது. எமது பாரம்பரிய வடிவங்களுள் ஒன்றாக நாம் இசை நாடகத்தைக் கருதுவதால் அதன் பெண்பாத்திர நடிப்பு அந்தவாறே தொடர்ந்து இருந்து வருவதே அதன் பெருமைக்கான சிறப்பாக இருக்கும் என்பதை மறுக்கவேண்டிய அவசியமில்லை.

பிரான்சிஸ் ஜெனம் பெண்பாத்திரமேற்று நடித்த கூத்துக்களைப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டாமற்போய்விட்டது. இருப்பினும் அவற்றிலும் அவர் தனது தனித்துவமான 'இயல்புநிலையில் நின்று ஆற்றுகை செய்தல்' என்ற அடித்தளத்தில் நின்றே அப்பெண்பாத்திரங்களையும் சமைத்திருப்பார் என்பதே எனது எண்ணமாக இருக்கிறது.

இறுதியாக, பிரான்சிஸ் ஜெனத்திடமிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய மேலும் முக்கியமான ஒன்றினையும் இங்கு நாம் கருத்தில் கொள்வது அவசியமாகிறது. அவர் தன் நடிப்பில் படைத்தபாத்திரங்களையும், தான் நெறியாள்கை செய்து தயாரித்த நாடகங்களையும் 'பண்பாட்டு மயப்படுத்தி'ப் பார்வையாளர் முன்நிறுத்தினார். அதன் காரணமாக அவரது பாத்திரங்களும் படைப்புக்களும் எந்த வகையிலும் அந்நியமாகிநிற்காது, உறவுக்குள் உறவாகி நின்றிணைகின்ற ஒன்றாகி நின்று பார்வையாளர்தம் மனங்களுள் பக்குவமாக இடம் பிடித்துக் கொள்ளும்.

அந்நிய மோடிகள், வகைகள், பாணிகள் ஆயிரம் வரினும் அவற்றை வரவேற்போம். ஆயினும் அவற்றை முழுமையாகப் புரிந்து கொள்வோம் பொறுமைகாத்துக் கசடறப் புரிந்து கொள்வோம். 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என அவதியுறாது, அந்த மோடிகளின் உள்ளுறை இயல்பினைத் தெளிவுறப்புரிந்து கொள்வோம். புரிந்து கொண்டபின், அவற்றை எம்வயமாக்குவோம். அவற்றின் இலக்கினையும், இயல்பினையும், பண்பினையும், பாணியினையும் எந்தவகையிலும் மாசுபடுத்தாது, பண்பாட்டு மயமாக்குவோம் - பண்படுத்துவோம், பண்பாட்டு வெறிகொண்ட சன்னதத்தில் நின்று அவ்வாறு செய்யாது, எமது புரிதலுக்கும், எமது விளக்கத்துக்கும், நயப்பிற்கும், நன்மைக்குமாக அந்தவாறு செய்வோம்.

இவை அனைத்தும் சாத்தியமாக வேண்டுமானால் ஆழ்ந்த அமைதி, நிதானம், பொறுமை, நிலைதளம்பாமை, ஒவ்வொன்றினதும் இயல்பு நிலையினைத் தெட்டத் தெளிவாகப் புரிந்துகொள்ளல். புரிந்து கொண்டதைத் தம்வயமாக்குதல், தம்பண்பாட்டுமயமாக்குதல் என்று நெடியபாதையில் பொறுமை காத்து நடந்து தம் கலையினைத் தாம் படைத்துக்கொள்ள வேண்டும் என்பதே பிரான்சிஸ் ஜெனம் தனது வாழ்வினூடும் கலைப்பணியினூடும் விட்டுச் சென்றிருக்கும் பாடம் என நான் உறுதியாக நம்புகிறேன். இது சாத்தியமாவதற்கு முதலில் 'மனிதனாக' இருப்பதற்கு நாம் முயல்வோமாக. பிரான்சிஸின் நினைவுகள் எமக்குத் துணைநிற்கும்.

*கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக.*

■ ■ ■

# நானும் ஜெனமும் - நனவிடை தோய்தல்

## சதாசிவம் உருத்திரேஸ்வரன்



அரங்கக் கல்லூரி, அரியாலை நாடக மன்ற நாடகங்கள் பலவற்றில் நடித்தவர் நாடகங்களின் பல்வேறு கூறுகளை முறைப்படி பயின்றவர் அரங்கயியலை முதன்மைப் பாடமாகக் கொண்ட பல்கலைக்கழக கலைமாணி பட்டதாரி.

*நெருநல் உளனொருவன் இன்றில்லை - என்னும்*
*பெருமை உடைத்து இவ்வுலகு*

- குறள்: 336

இவ்வுலகில் வாழும் காலத்தில் பெயர், புகழ் நிலைத்திருக்கும் வகையில் ஏதோ ஒரு துறையில் முத்திரை பதித்து, அதன் உச்சத்தை தொட்டிருப்பவர்கள் ஒருசிலரே. காலத்தால் அழியாத பெரும் பேறு பெற்றிருப்பவர்கள் மிகமிகச் சிலரே. இந்த வகையில் நாடகத்துறையில் அவர் பிறந்த ஊரான சில்லாலையில் கல்வி கற்ற பாடசாலையில் தனது பதினோராவது வயதில் ஒரு பெண் வேடமேற்று நடித்ததன் மூலம் ஜெனம் அவர்களின் நாடகப் பிரவேசம் ஆரம்பமாகியது. தொடர்ச்சியாக ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் நாடக உலகில் குறிப்பாக இலங்கை தமிழ் நாடக உலகில் ஆளுமை மிக்க முக்கியஸ்தர்களில் முதன்மையானவர்களில் ஒருவராக ஜெனம் அவர்கள் விளங்குகின்றார்.

இவர் தனது வாழ் நாளில் பெண், ஆண் வேடம் இரண்டையும் அநாயாசமாக, அற்புதமாக ஆற்றுகைப்படுத்தும் திறன் மிகுந்தவர். இதற்கு நாடகத்தின் மீது அவர் கொண்டிருந்த உறுதியான பற்றும், அர்ப்பணிப்போடு கூடிய அவரது உழைப்பும் துணையாக நின்றன. நாட்டுக்கூத்துக் கலையில் ஆர்வம் கொண்டு சில்லாலையிலும் பின் குருநகரில் புகழ் பூத்த நாடகக் கூத்து அண்ணாவியார் அமரர் பூந்தான் யோசேப் அவர்களின் நெறியாள்கையில் பல நாட்டுக்கூத்துக்களிலும் நடித்து ஆடல், பாடல், நடிப்பு ஆகியவற்றில் மேன்மேலும் மெருகேற்றிக்கொண்டார். இவர் நடித்த நாட்டுக்கூத்துக்களில் கருங்குயில், குன்றத்துக் கொலை, சங்கிலியன், எஸ்தாக்கியார் போன்றவை குறிப்பிடக்கூடியவை.

இதன்பின் இவரது நாடக ஆற்றுகைப்பரிமாணம் யாழ்ப்பாணத்தில் இயங்கிய பல நாடக மன்றங்களிலும் வெளிப்படத்தொடங்கியது. புகழ்பெற்ற நெறியாளர்களினது நாடகங்களிலும் நடிக்கக் கூடிய வாய்ப்புக்கள் தேடிவந்தன. கலையரசு சொர்ணலிங்கம் ஐயா அவர்களின் ஒறியன்ஸ் Sports and fine arts Society, மானிப்பாய் மறுமலர்ச்சி நாடகமன்றம், யாழ் திருமறைக்கலாமன்றம், திருநெல்வேலி அரங்கத்தார் குழு, வண்ணை கலைவாணர் நாடகமன்றம், அரியாலை நாடகமன்றம், கொழும்பைத் தளமாகக் கொண்ட நாடக குழுக்கள், நாடக அரங்கக்கல்லூரி நாடகங்கள் என... ஏறக்குறைய நூறு நாடகங்களுக்கு மேல் நடித்துள்ளார்.

ஈழத்து தமிழ் நாடக உலகில் முதன்மையானவர்களில் ஒருவரான கலையரசு சொர்ணலிங்கம் ஐயா அவர்கள் நெறியாள்கை செய்த ரகுநாதன், குழந்தை ம.சண்முகலிங்கம், S.T. அரசர் போன்றோர் நடித்து 1962ல் மேடையேறிய தேரோட்டி மகன் நாடகத்தில் ஜெனம் அவர்கள் குந்திதேவியாக நடித்து முத்திரை பதித்தார். இவரது குந்திதேவி பாத்திர நடிப்பினை ரசித்த ரசிகர்கள் சில கட்டங்களில் விம்மி விம்மி அழுதது இன்றும் நினைவிருப்பதாக அந்நாடகத்தில் அருச்சுனனாக நடித்த குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் கூறுவார்.

மானிப்பாய் மறுமலர்ச்சி நாடகமன்றத்தினரின் ஆராவமுது, அசடா, மல்லியம் மங்களம் ஆகிய நாடகங்களிலும் வண்ணை கலைவாணர் நாடகமன்றத்தினரின் புகழ்பெற்ற நாடகமான S.T.அரசரின் நெறியாள்கையில் T.S.லோகநாதன் திப்பு சுல்தானாக நடித்த திப்பு சுல்தான் நாடகத்தில் ஜெனம் அவர்கள் பேகம் சாஹியா என்ற பெண் வேடத்தில் நடித்து புகழின் உச்சிக்கே சென்றார். அத்துடன் அவர்கள் தயாரித்த தமிழன் கதை என்ற நாடகத்திலும் பெண் பாத்திரத்தில் நடித்தார். 1966ம் ஆண்டு றெக்கிளமேஸன் சனசமூக நிலையத்தினரின் G.P. பேமினஸ் நெறியாள்கை செய்த எங்கே நிம்மதி நாடகத்திலும் பெண் பாத்திரமேற்று சிறப்பாக நடித்துள்ளார்.

குழந்தை ம.சண்முகலிங்கம் பிரதியாக்கம் செய்த வையத்துள் தெய்வம் நாடகத்தை S.T. அரசு நெறியாள்கை செய்திருந்தார். இந்நாடகத்தில் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் வள்ளுவராகவும், ஜெனம் அவர்கள் தனது 22வது வயதில் ஔவைப் பாட்டியாகவும் நடித்திருந்தார். இந்நாடகம் 1974ம் ஆண்டு 4வது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிலும் மேடையேற்றப்பட்டது.

திருநெல்வேலியில் விதானை செல்வரத்தினம், குழந்தை ம.சண்முகலிங்கம், S.T. அரசு, ஜெனம் ஆகியோர் இணைந்து தோற்றுவித்த அரங்கத்தார் நாடகக்குழுவின் 'அன்னத்திற்கு அரோகரா' நாடகத்தில் அன்னம் என்ற பெண் பாத்திரத்தில் ஜெனம் நடித்துள்ளார்.




## யாழ் திருமறைக் கலாமன்றம்:

உலக தமிழ் நாடக வரலாற்றில் ஈழத்து தமிழ் நாடகக்கலையை பல மேற்குலக நாடுகளிற்கும் கொண்டு சென்று ஈழத்து தமிழ் நாடக ஆற்றுகைத் திறனையும் இன்றும் வெளிப்படுத்தி வருகின்ற யாழ் திருமறைக் கலாமன்றத்தின் நாடகங்களான அருள்தந்தை மரிய சேவியர் அவர்களது நெறியாள்கையில் களங்கம், சாவை வென்ற சத்தியன், அன்பில் மலர்ந்த அமரகாவியம் ஆகிய நாடகங்களிலும், பல திருப்பாடு நாடகங்களிலும் ஜெனம் அவர்கள் தனது நடிப்பை வெளிக்காட்டியுள்ளார்.

மற்றும், கொழும்பை தளமாகக் கொண்ட நாடகக்குழுக்கள் தமது நாடகங்களை யாழ்ப்பாணத்தில் மேடையேற்றும் பொழுது யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான குழந்தை ம.சண்முகலிங்கம், ஜெனம் ஆகியோரை தங்களது நாடகத்தில் இணைத்துக்கொள்வது வழமையாக இருந்து வந்தது. இதில் சுஹைர் ஹமீடின் வாடகைக்கு அறை, கொலைகாரன், வேதாளம் சொன்ன கதை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேறிய நாடகங்கள்.

## அரியாலையில் ஜெனம்:

1919ம் ஆண்டிலிருந்து அரியாலையில் அன்றிருந்த புகழ்பெற்ற கல்விமான்களாலும், பிரமுகர்களாலும் இன்றுவரை தொடர்ச்சியாக ஒவ்வொரு புத்தாண்டுப் பிறப்பன்றும் பகலில் விளையாட்டுப் போட்டிகள், இரவில் கலை நிகழ்ச்சிகள், பிரமாண்டமான நாடகமேடையேற்றத்துடன் கொண்டாடப்பட்டு வரும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் 1963ம் ஆண்டு 44வது விழா கொண்டாடப்பட்டபொழுது அரியாலை நாடக மன்றத்தினால் கர்ணன் என்னும் இதிகாச நாடகம் மிகப்பிரமாண்டமாக தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டது எனது ஞாபகத்திற்கு வருகின்றது. இந்நாடகத்தில் கர்ணனும், அருச்சுனனும் யுத்தம் புரியும் காட்சிக்காக இரண்டு தேர்கள் மரத்தினால் செய்யப்பட்டு மேடையில் காட்சிப்படுத்தப்பட்டன. பெருமளவு இரசிகர்கள் வருகை தந்திருந்தார்கள். நான் சிறுவனாக இருந்த காரணத்தால் முன்வரிசையில் இருந்து நாடகத்தை இரசித்துக் கொண்டிருந்தேன். குந்திதேவியும் கர்ணனும் "அம்மா - மகனே" என்று ஒருவரையொருவர் கட்டித் தழுவி அழும் காட்சி. எம் பின்னாலிருந்து பலர் விம்மி விம்மி அழும் சத்தம் கேட்கிறது... திரும்பிப் பார்த்தால் பல பெண்கள் அழுது கொண்டிருந்தார்கள். எல்லோரையும் கண் கலங்கவைத்த இந்தக் காட்சி மிகவும் தத்துரூபமாகவும் உணர்ச்சிகரமாகவும் எல்லோர் மனதையும் உருக்கவைத்த நடிப்பு ஜெனம் அவர்களால் வெளிப்படுத்தப்பட்டது என்பதுதான் உண்மை. நாடகம் முடிவடைந்தது. எல்லோர் வாயிலும் குந்திதேவியாக நடித்த பிரான்ஸிஸ் ஜெனம் அவர்களைப் பற்றியே பேச்சாக இருந்தது. சிலர் உண்மையான பெண்ணென்று வாதாடியது நினைவில் வருகின்றது. கர்ணன் நாடகத்தில் குந்திதேவியாக நடித்து அரியாலை மக்களின் இதயத்தில் குடியேறிய ஒரு நடிகனாக ஜெனம் இடம் பெற்றுவிட்டார்.

இதன்பின் அரியாலை சனசமூக நிலையம் மேடையேற்றிய கோவலன் கண்ணகி நாடகத்திலும் கண்ணகியாக நடித்துள்ளார். அரியாலை நாடகங்களில் வெளிப்பிரதேசங்களிலிருந்து பெண் பாத்திரத்தில் நடித்துப் புகழ்பெற்ற வீரமணிஐயர், முன்னாள் பா.உ மு.ஆலாலசுந்தரம் ஆகியோர் வரிசையில் எங்கள் ஜெனமும் இடம்பெற்றுவிட்டது இங்கு பதிவிற்குரியதாகும்.

## நானும் ஜெனமும்:

காலங்கள் ஓடின நானும் ஒரு நடிகனாக அரியாலை விழாக்களில் மேடையேறும் நாடகங்களில் பிரதான நடிகனானேன். ஜெனம் அவர்களைச் சந்திக்க வேண்டும், அறிமுகமாகவேண்டும், அவரது நாடக அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஏக்கம் என்னுள் விரவி இருந்தது. இத்தனைக்கும் எந்தவித ஆர்ப்பாட்டமோ, ஆரவாரமோ இல்லாது அமைதியாக வாழ்ந்து வந்த அந்த நாடக ஆளுமையின் வீடு எனது வீட்டிலிருந்து மிக அண்மையிலேயே இருந்தது. நாவலர் வீதியில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திற்கு அருகில் தனது வீட்டிற்கு 'கலைச்சோலை' எனப் பெயரிட்டு வாழ்ந்து வந்தார். நாவலர் வீதி வழியால் செல்லும் பொழுது அவரது கலைச்சோலை இல்லத்தை கடந்து செல்லும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஜெனம் அவர்களின் நினைப்பு தவறாது எழும். சந்திப்பை ஏற்படுத்தும் நாளுக்காக காத்திருந்தேன். நாளும் கனிந்தது.

## நாடக அரங்கக் கல்லூரி:

'நாமும் நமக்கென்றோர் நலியா கலை உடையோம்' என்ற மஹாகவியின் கூற்றிற்கிணங்க ஈழத்து தமிழ் நாடக தேடல் முயற்சியின் முதல் கட்டமாக குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் முயற்சியில் அவரை செயலதிபராக கொண்டு அ.தாசீசியஸ், விதானை செல்வரத்தினம், S.T.அரசர்,ஜெனம், T.S.லோகநாதன், சிசு.நாகேந்திரா போன்றோரினதும், ஏனைய கலை பிரமுகர்களினதும் ஒத்துழைப்புடன் 23.01.1978ம் ஆண்டு கலையரசு சொர்ணலிங்கம் அவர்களால் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ் நாடக அரங்கக்கல்லூரி என்ற நிறுவனம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலே வாழுகின்ற நடிகர்கள் தாங்கள் நடிக்கின்ற நாடகத்தில் சிறப்பான வெளிப்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய நோக்கோடு அவர்களுக்கு நாடக களப்பயிற்சி வழங்குவதும், நாடக கூறுகளின் நுட்பங்களை அறியக் கொடுப்பதுமாக அரங்கக் கல்லூரி தனது பணியை ஒவ்வொரு சனி, ஞாயிறு கிழமைகளில் திருநெல்வேலி இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் நடத்தியது.

நாடகத்தில் மிகுந்த ஆர்வம் கொண்ட நானும், திருமறைக்கலாமன்றத்தைச் சேர்ந்த நண்பர் ஒருவருடன் களப்பயிற்சிக்கு சென்றிருந்தோம். அங்கு ஏறக்குறைய நூறு நடிப்பு ஆர்வலர்கள் பங்குகொண்டு களப்பயிற்சி பெற்றுவந்தது எனக்கு வியப்பைத் தந்தது. அதில் நான் எந்த நாடக ஆளுமையை சந்திக்க வேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்தேனோ அந்த ஆளுமை ஜெனம் அவர்கள் அரைக்களிசானுடன் எல்லோருடனும் சேர்ந்து பயிற்சி பெற்றுக் கொண்டிருந்ததை அவதானித்தேன். அங்கு தாசீசியஸ் அவர்களால் மூச்சுப்பயிற்சி, குரல் பயிற்சி, தளர்வுப்பயிற்சி, மனக்குவிப்பு பயிற்சி போன்ற நடிகனுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்கிக்கொண்டிருந்தார்கள். நானும் ஒரு மாணவனாக பங்கேற்றேன். ஜெனம் அவர்களும் பங்கேற்று பயிற்சி பெற்றுக்கொண்டிருந்ததை அவதானித்தேன். மேடையில் புகழ்பெற்ற நாடக ஆளுமையொன்று எதுவுமே தெரியாத ஒரு மனிதனைப்போல் ஜெனம் அவர்கள் பயிற்சிகளைச் செய்துகொண்டிருந்தார். பின்பு இதனை குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "நடிப்புக்கு இலக்கணம் வகுக்கும் ஆற்றலும், அறிவும், கற்பனை வளமும் உள்ளவராக இருந்து பல ஆண்டுகளாக பல்வேறுபட்ட குணவியல்பு கொண்ட பாத்திரங்களை திறம்படப்படைத்துப் பலரின் பாராட்டைப் பெற்ற பின்பும் ஏதும் அறியாதவர் போல் எவரிடமும் எதையும் கேட்டறிந்து கற்க வேண்டும் என்ற மனப்பாங்குடன் இருப்பவர் பிரான்ஸிஸ் ஜெனம். இவரது மனப்பக்குவம் கலைஞருக்கு இருந்தால் கலை வளரும், நிச்சயமாக மனிதர் வளருவர்".

இக்களப்பயிற்சியில் புகழ்பெற்ற நடிகர்களான S.T.அரசு, A.T. பொன்னுத்துரை, சோ. தேவராஜா, சிசு. நாகேந்திரா, T.S. லோகநாதன், V.M.குகராஜா, ஆனந்தராணி

*தொடர்தல் 87ம் பக்கம்*

# நானும் ஜெனமும்...

86ம் பக்கத் தொடர்ச்சி...

பாலேந்திரா போன்றவர்களும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. நானும் ஜெனம் அவர்களும் அறிமுகமானோம், நண்பர்களானோம், பயிற்சிக்குச் செல்லும் வேளைகளில் இருவரும் துவிச்சக்கரவண்டியில் ஒன்றாகவே செல்வோம். அவரது அனுபங்களைப் படிப்படியாக பெற்றுக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டேன். அவரது வீட்டில் சந்திப்பு நடைபெறும் வேளைகளில் அவர் தான் நடித்த நாடகங்களைப் பற்றியும் ஏற்ற பாத்திரங்களைப் பற்றியும் சிறிது சிறிதாகக் கூறிவைப்பார். மிகவும் நெருக்கமானோம்.

### சொக்கனின் 'தெய்வப்பாவை':

அகில இலங்கை சேக்கிழார் மன்றம் தயாரித்த சொக்கனின் 'தெய்வப்பாவை' என்னும் நாடகம் 1978ம் ஆண்டு S.T. அரசர் அவர்களின் நெறியாள்கையில் மேடையேற்றப்பட்டது. இந்நாடகத்திற்கான ஒத்திகை நல்லை ஆதீன முதலாவது குரு மகா சந்நிதானம் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இந்நாடகத்தில் நான் கூன் பாண்டியன் என்னும் அரசனாகவும், ஜெனம் அவர்கள் திருநாவுக்கரசு நாயனாராகவும் நடித்திருந்தோம். மதத்தால் ஜெனம் அவர்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்தும், திருநாவுக்கரசு நாயனாரின் பாத்திரத்தை வெகு சிறப்பாக செய்திருந்தது இங்கே குறிப்பிடத்தக்கது. 77வயதான முதிய தோற்றத்தில் அப்பாத்திரத்திற்குரிய தளர்வான நடை, பேச்சு, உடலசைவுகள் எல்லாவற்றையும் மிக அற்புதமாக வெளிப்படுத்தினார் என அமரர் சொக்கன் அவர்கள் கூறியுள்ளார்.

### மஹாகவியின் 'கோடை':

நாடக அரங்கக் கல்லூரி அங்கு பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு தனது ரசிகர் அவைக்காக 1979ம் ஆண்டு 03ம் மாதம் 2ம் திகதி முதலாவதாக தயாரித்து மேடையேற்றிய நாடகம் மஹாகவியின் 'கோடை'. யதார்த்த பண்புடன் கூடிய ஒரு பா நாடகம் கோடை. இந்நாடகத்தை V.M. குகராஜா நெறிப்படுத்தியிருந்தார். கோடை வெயில் கொடுமையால் விளைந்ததல்ல அது அந்நியர் ஆட்சிக்கொடுமையால் வந்தது இந்த புழுக்கம் சாதாரண மனித உள்ளங்களிலும் ஊடுருவி இருப்பதை இந்த நாடகத்தின் மூலம் எடுத்துக்காட்டப்பட்டது. இந்த நாடகத்தில் மாணிக்கம் என்ற நாதஸ்வர கலைஞனாக பிரான்ஸிஸ் ஜெனம் அவர்கள் நடித்திருந்தார்கள்.

### கந்தன் கருணை:

இந்நாடகம் 25.03.1979ல் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது. அரங்கக் கல்லூரியின் இரண்டாவது தயாரிப்பு இந்நாடகம். அ.தாசீசியஸ் நெறியாள்கை செய்திருந்தார். இந்நாடகத்தில் பாரம்பரிய கூத்துக்கலை, காத்தான்கூத்து ஆட்டங்கள் பல சேர்க்கப்பட்டு உருவாக்கப்பட்ட ஒரு நாடகம். சாதித்துவத்தை சாடும் வகையில் அமைந்த இந்நாடகத்தில் ஜெனம் அவர்கள் நாரதராக சிறப்பாக நடித்திருந்தார். இதில் முருகனுடன் நாரதர் இணைந்து ஆடும் ஆட்டம் மிக அற்புதமாக அமைந்திருக்கும்.

### அ. தாசீசியஸின் 'பொறுத்தது போதும்':

அ. தாசீசியஸின் பொறுத்தது போதும் எனும் நாடகம் 1979ம் ஆண்டு 08ம் மாதம் 26ம் திகதி மேடையேற்றப்பட்டது. மீனவத் தொழிலாளரையும் அவர்கள் அன்றாடம் அனுபவிக்கும் அல்லல்களையும் அவர்களை பரம்பரை பரம்பரையாக சுரண்டிக் கொழுக்கும் சம்மாட்டியின் மரபு வழிவந்த கொடுமைகளையும் கதைப்பொருளாகவும் கடற்கரையை கதைக்களமாகவும் கொண்டு இந்நாடகம் அ.தாசீசியஸ் அவர்களால் புனையப்பட்டிருந்தது. இந்நாடகத்தில் பிரதான பாத்திரமான சம்மாட்டியார் பாத்திரத்தை ஜெனம் அவர்கள் ஏற்று அற்புதமாக நடித்திருந்தார். இந்நாடகம் அகில இலங்கை தமிழ் நாடகப்போட்டியில் பங்குபற்றி சிறந்த பிரதியாக்கம் சிறந்த நெறியாள்கைக்கான பரிசில்களை அ. தாசீசியஸ் அவர்களும், சிறந்த நடிகருக்கான பரிசினை ஜெனம் அவர்களும், சிறந்த துணை நடிகருக்கான பரிசினை A.T. பொன்னுத்துரை அவர்களும் பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது. இந்நாடகத்தின் மூலம் ஜெனம் அவர்கள் அகில இலங்கையிலும் புகழ்ந்து பேசப்படும் ஒரு நடிகரானார். இந்நாடகம் தமிழ்நாட்டிலும் மேடையேறியது குறிப்பிடத்தக்கது.

### குழந்தை மா.சண்முகலிங்கத்தின் 'கூடிவிளையாடு பாப்பா':

இந்நாடகம் 12.10.1979ல் அரங்கக்கல்லூரியின் நான்காவது தயாரிப்பாக யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது. குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் பிரதியாக்கத்தில் அ. தாசீசியஸ் அவர்கள் நெறிப்படுத்தியிருந்தார். இது ஒரு வயது வந்தவர்கள், சிறுவர்களுக்கான நாடகமாக (Adult to Children) அமைந்தது. இந்நாடகத்தில் மனிதனாக தாசீசியஸ் அவர்கள் பங்கேற்றிருந்தார். ஏனைய மிருகங்களாக பல நடிகர்கள் நடித்திருந்தார்கள். இதில் ஜெனம் அவர்கள் பன்றியாக நடித்திருந்தார். இந்நாடகத்தில் பார்வையாளர்களையும் பங்கேற்கும் வகையில் 'ஓடி விளையாடு பாப்பா' என்ற பாடலை அவர்களையும் சேர்ந்து பாடவைத்த திறமை தாசீசியஸ் அவர்களுக்கு வெற்றியளித்தது. ஒரு மேடையேற்றத்தின் போது தாசீசியஸ் அவர்கள் வெளிநாடு சென்ற காரணத்தினால் நான் மனிதனாக நடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது பெரும் பேறாக கருதுகின்றேன். இந்நாடகம் கொழும்பு உட்பட பல பாகங்களிலும் மேடையேற்றப்பட்டது.




### V.M.குகராஜாவின் 'அவள் ஏன் கலங்குகிறாள்':

இந்நாடகம் அகில இலங்கை வானொலியில் ஒலிபரப்பானது. V.M. குகராஜாவின் பிரதியாக்கத்தில் உருவான இந்நாடகம் 02.08.1980ம் ஆண்டு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது. இந்நாடகத்தை குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் நெறிப்படுத்தியிருந்தார். தம்பையா என்ற குடும்பத்தலைவன் பாத்திரத்தில் ஜெனம் அவர்கள் நடித்திருந்தார்கள். இறுதிக்காட்சியில் வாழ்க்கையில் விரக்தியுற்று தூக்கில் தொங்குவதற்காக இடக்கையில் கயிற்றைச் சுமந்து கொண்டு மேடைக்குப் புறமாக செல்லும் அவரின் நடிப்பு அவருக்கே உரியது.

### மௌனகுருவின் 'சங்காரம்':

சி. மௌனகுரு அவர்களின் பிரதியாக்கம், நெறியாள்கையில் 15.11.1980ல் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றப்பட்டு பல மேடைகளில் நடிக்கப்பட்டது. எமது ஆதிக் கலை வடிவமாகவுள்ள கூத்து, பூரணமான பொலிவுடன் மட்டக்களப்பு பிரதேசத்தில் தான் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அந்த புராதனக் கலைவடிவமான கூத்தின், வடமோடி ஆட்டங்கள், பாடல்கள் ஆகியவற்றை உருவமாக ஏற்றுக்கொண்டு உரிய உத்திமுறைகளையும் கையாண்டு அப்பாரம்பரியமான உருவத்துள் புதிய சமகால தேவைக்கு உகந்த உள்ளடக்கத்தைப் பொதிந்து மௌனகுரு அவர்கள் சங்காரத்தை ஆக்கியுள்ளார். பாரம்பரிய கூத்துமுறையின் இயல்பு கெடாமல் உலகின் தீமைகள் யாவும், சங்காரம் செய்யப்பட்டு புதியதோர் சமுதாய அமைப்பு நிலைநிறுத்தப்படுவது இந்நாடகத்தில் காட்டப்படுகின்றது. அழகிய ஆட்டங்கள், இனிய பாடல்கள், கவர்ச்சியான வேடங்கள் புனைந்த பாத்திரங்கள் ஆகியவற்றினூடாக கலைத்துவம் புனிதம் கெடாமல் பேணப்பட்டுள்ளது. இந்நாடகத்தில் தோன்றும் வர்க்க, சாதி, இன, நிற பேத அரக்கர்களின் தலைவனான வர்க்க பேத அரக்கனாக ஜெனம் அவர்கள் நடித்திருந்தார். நாட்டுக்கூத்தில் நடித்து ஆடிப்பாடிய அனுபவத்தோடு அவரது வடமோடி ஆட்டலாபகமும், ஆடல் இனிமையும் எல்லோரையும் கவர்ந்தது. இறுதிக் காட்சியில் தொழிலாளர் தலைவனுடன் மோதும் பொழுது தொடையில் தட்டிக்கொண்டு துள்ளி எழும்பும் ஜெனம் அவர்களின் அட்டகாசமான நடிப்பு இன்றும் எல்லோராலும் பேசப்படும் ஒன்றாகும்.

### மஹாகவியின்'புதியதொரு வீடு':

மஹாகவியின் 'புதியதொருவீடு' நாடகம் 21.03.1981ல் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது. நாடகத்தை L.M. றேமன் என்னும் இளைஞன் நெறியாள்கை செய்திருந்தார். இந்நாடகத்தில் ஜெனம் அவர்கள் மேடையில் இடி, மின்னல், கடல் கொந்தளிப்பு, சீற்றம் போன்றவற்றைக் காட்டும் ஆடல், பாடல் குழுவில் முக்கியமானவராக திகழ்ந்து பார்வையாளர்களை பிரமிக்கவைத்தார்.

### ஞானியின் 'குருஷேத்திரோப தேசம்':

இந்நாடகம் 26.03.1982ல் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேறியது. கணையாளி என்ற சஞ்சிகையில் வந்த ஞானியின் 'நவீன குசேலர்' என்ற தெருக்கூத்துப்பாணியில் அமைந்த நாடகத்தை சி.மௌனகுரு அவர்கள் எமது களத்திற்கு பொருந்தக்கூடிய முறையில் அமைத்து தென்மோடிப் பாடல்களையும், ஆட்டங்கள் சிலவற்றையும் புகுத்தி நல்லதோர் கலைப் படைப்பாக குருஷேத்திரோபதேசம் என்ற பெயரில் தந்துள்ளார். புராண இதிகாச கதைப்பொருள்களை எவ்வாறு சமகாலப் பிரச்சினைகளைக் கூறக் கையாளலாம் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. இந்நாடகத்தில் கட்டியகாரனாகவும், குசேலர் மனைவியாகவும் ஜெனம் அவர்கள் நடித்து அசத்தியிருந்தார்.

### நா.சுந்தரலிங்கத்தின் 'அபசுரம்':

இந்நாடகம் 25.07.1981ல் யாழ் றிம்மர் மண்டபத்தில் மேடையேறிபின் பல இடங்களில் மேடையேற்றப்பட்டது. இது ஓர் அபத்த நாடக சாயலைக்கொண்ட நாடகம் ஆகும். நா. சுந்தரலிங்கம் அவர்களால் பிரதியாக்கம் செய்யப்பட்ட இந்நாடகத்தை சி. மௌனகுரு அவர்கள் நெறியாள்கை செய்திருந்தார். சமூக குறைபாடுகளை சுரண்டல்களையும், ஏமாற்றுக்களையும், போலித்தனங்களையும், பலவீனங்களையும், அனர்த்தங்களையும் அழகாகவும், ஆழமாகவும் எடுத்துக்காட்டும் இந்நாடகத்தில் ஜெனம், சுந்தா, அரசர், உருத்திரேஸ்வரன், தேவராஜா, சிதம்பரநாதன் ஆகியோர் நடித்திருந்தனர். நாடகம் பார்வையார்களுக்கு ஒரு வித்தியாசமான அனுபவத்தைக் கொடுத்ததோடு சிந்தனையை தட்டியெழுப்பும் நாடகமாக அமைந்தது. ஜெனம் அரசியல்வாதி அருளராக அற்புதமாக நடித்திருந்தார். எவராலும் என்றும் மறக்கமுடியாத ஆற்றுகையாக அமைந்திருந்தது. ஆரம்பம் முதல் முடிவுவரை மேடையில் நின்று பல்விதமான நடிப்பு ஆற்றல்களை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### மௌனகுருவின் 'சக்தி பிறக்குது':

இந்நாடகம் சர்வதேச பெண்கள் தினமான 08.03.1986 அன்று யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் மேடையேறியது. ஆணாதிக்க சமுதாயத்தில் ஆண்களின் அட்டகாசத்தையும் அடக்குமுறையையும் பொறுக்கமுடியாது பெண்கள் சக்தி பெற்று வீறிட்டெழுவதாக இந்நாடகம் அமைந்திருந்தது. இந்நாடகத்தில் குடிகாரக் கணவன், தோட்டத்துக் கங்காணி, ஆலை முதலாளி, இளைஞர் குழு ஆகியவர்கள் எப்படி பெண் சமுதாயத்தை அடக்குகின்றார்கள் என்பதை அழகாக கூறிய இந்த நாடகத்தில் ஜெனம் அவர்கள் குடிகாரக் கணவனாகத் தோன்றி 'என்னடி உந்தன் கோப்பியில் ஒருசிறு இனிப்பும் காணவில்லை' என்று தொடங்கும் பாடலை குடிகாரனுக்கு ஏற்ற பாவனையில் பாடி அங்க அசைவுகள் செய்து நடித்தது இன்றைக்கும் கண்ணுக்குள் நிற்கின்றது.

### முருகையனின் 'வெறியாட்டு':

இந்நாடகம் யாழ். பட்டப்படிப்பு கல்லூரியால் தயாரிக்கப்பட்டு V.M. குகராஜாவினால் நெறியாள்கை செய்யப்பட்டு 17.05.1986ல் யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி மண்டபத்தில் மேடையேறி பல அரங்குகளில் மேடையேற்றப்பட்டது. கவிஞர் இ. முருகையன் அவர்களால் யாழ். பொது நூலக எரிப்பு சம்பவத்தை மையக்கருவாக வைத்து பா நாடகமாக எழுதப்பட்டது. இந்நாடகத்திலும் ஆரம்பத்தில் ஜெனம் பிரமுகர் என்ற வேடத்தில் நடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.


'பகை முழுதும் ஒழிய ஒரு பந்தம் கொழுத்துவேன், இலை தளைகள் கிளை ஒடிய தண்டம் தொடக்குவேன்' என்று தொடங்கும் பாடலை ஜெனம் அவர்கள் ஆக்குரோசத்துடன் ஆடிப்பாடும் காட்சி அட்டகாசமாக அமைந்திருந்தது. அதன் பிறகு அவர் இந்த நாடகத்திலிருந்து விலகிக்கொள்ள நான் இப்பாத்திரத்தை ஏற்று நடித்திருந்தேன். ஜெனம் அவர்களின் கற்பனை வளத்தில் உருவாகிய அதே நடிப்பையே நானும் கைக்கொண்டிருந்தேன்.

### குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'எந்தையும் தாயும்':

அரங்கக் கல்லூரியின் தயாரிப்பான இந்நாடகம் 1992ல் அரங்கேறியது. குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் பிரதியாக்கம் செய்ய, வைத்தியகலாநிதி கா. சிவயோகன் அவர்கள் நெறியாள்கை செய்திருந்தார். இந்நாடகம் தற்காலத்தில் பெற்ற பிள்ளைகளை வெளிநாட்டிற்கு அனுப்பிவிட்டு தனியே இருந்து ஏங்கிக்கொண்டிருந்து அயலவர்களின் உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஒருவரின் கதையைச் சொல்வதாக அமைந்திருந்தது. இந்நாட

தொடர்தல் 88ம் பக்கம்

# மூத்த நாடகக் கலைஞரின் இழப்பு



## க. பாலேந்திரா

தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழக ஸ்தாபகர், 40 வருடங்களாகத் தொடர்ச்சியாக நாடகங்களை ஆற்றுப்படுத்தும் ஒரு நாடக இயக்கம். நடிகர், நெறியாளர். இதுவரை 68 நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றியவர்.

சுமார் அரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் எமது ஊரான அரியாலையில் மேடையேற்றப்பட்ட 'கர்ணன்' நாடகத்தில் திரு. பிரான்சிஸ் ஜெனம் அவர்களை முதல் முதலில் பார்த்தேன். எனது சிறுவயதில் அவரது அற்புதமான நடிப்பைக் கண்டு ரசித்திருக்கிறேன். அந்தக்காட்சிகள் இன்றும் என் மனத்தை நிறைத்து நிற்கின்றன. அதில் அவர் குந்திதேவியாக பெண் பாத்திரமேற்று நடித்திருந்தார்.

அவர் என்னுடைய ஊரிலே அக்காலத்தில் வசித்திருந்த போதும் தனிப்பட்ட ரீதியில் அப்போது நான் அவருடன் பழகியதில்லை. 1970களில் நான் கொழும்பு சென்ற பின்னர் 1973ல் 'ஏணிப்படிகள்' நாடகத்தினை திரு. சுஹைர் ஹமீட் அவர்களது நெறியாள்கையில் தயாரித்த பின்னர் தான் அவரைக் கண்டு பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. திரு. சுஹைர் ஹமீட், திரு. பிரான்சிஸ் ஜெனத்தின் நடிப்பாற்றலைப் புகழ்ந்து கூறி அவரை அறிமுகப் படுத்தினார். பின்னர், 1974ம் ஆண்டு நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் எமது 'ஏணிப்படிகள்' நாடகமும் அம்பியின் 'வேதாளம் சொன்ன கதை' நாடகமும் சுஹைர் ஹமீடின் நெறியாள்கையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேறின. 'வேதாளம் சென்ன கதை' நாடகத்தில் திரு.பிரான்சிஸ் ஜெனம் அவர்கள் வேதாளமாக அருமையாக நடித்திருந்தார். அப்போதுதான் அவர் நடிப்பில் வெளிப்பட்ட நுணுக்கங்களை அவதானித்தேன். உடலையும் குரலையும் அவர் லாவகமாகக் கையாண்டு, கொடுத்த எந்தப் பாத்திரத்திற்கும் உயிர் கொடுக்கக் கூடிய அற்புதமான கலைஞர் என்பதனை அவதானித்தேன். அவர் ஒரு இயல்பான கலைஞர். அது அவருக்கு இயற்கையின் ஒரு கொடை. ஒரு நெறியாளனின் எதிர்பார்ப்பினை அப்படியே அரங்கம் என்ற




பௌதீக வெளியில் கொண்டுவரக்கூடிய ஆற்றல் சில நடிகர்களுக்கு மட்டுமே கைவர முடியும் என்பதனை கண்டிருக்கிறேன். அப்படியான ஒரு அலாதியான கலைஞர் அவர்.

எனது கலைப் பயணத்தில் என்னுடைய நாடகங்களில் கூடுதலாக புதிய நடிகர்களையே பயிற்றுவித்து நாடகங்களைத் தயாரித்து வரும் முறைமையை நான் கடைப்பிடித்து வருவதனால் திரு. பிரான்சிஸ் ஜெனம் அவர்களை என்னுடைய நாடகங்களில் இணைக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டவில்லை. அது எனக்கு ஒரு கவலை. படிப்பு, வேலை என நான் கொழும்பிலேயே வசித்து வந்த காரணத்தினால் அந்தக் காலங்களில் மொறட்டுவ பல்கலைக் கழகம், கொழும்பு பல்கலைக்கழகம் போன்ற இடங்களில் பயிலும் மாணவர்களைக் கொண்டே பெரும்பாலும் எனது நாடகங்களைத் தயாரித்திருந்தேன். அப்போது அவர் யாழ்ப்பாணத்தில் இருந்தார். சந்தர்ப்பம் கிடைத்த பொழுதுகளில் அவர் நடித்த நாடகங்களை பார்த்திருக்கிறேன். 1980களின் பிற்பகுதியில் எனது புலப் பெயர்வுக்குப் பின்னர் ஜெனம் அவர்களது கூடுதலான நவீன நாடகங்களை பார்க்கும் சந்தர்ப்பமும் எனக்குக்கிட்டவில்லை.

பேராசிரியர் சிவசேகரம் அவர்கள் லண்டனில் இருந்தபோது எமக்காக எழுதிய சில சிறுவர் நாடகங்களில் ஒன்றான 'அயலார் தீர்ப்பு' நாடகத்தின் உப கதையாக எழுதத் திட்டமிட்டு பின்னர் நீளம் கருதி விடப்பட்ட 'கெக்குளே ராசன் கதை' நாடகத்தை பின்னர் இலங்கையில் திரு. ஜெனம் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க வசந்தன் கூத்து மெட்டில் எழுதினார். பிரதியாக்கத்திலும் திரு. ஜெனம் அவர்கள் உதவியுள்ளார். சிறுவர்களுக்கான அந்த நாடகத்தினை திரு. ஜெனம் அவர்கள் திருமறைக் கலாமன்றம் மூலம் தயாரித்து பிரான்ஸ் நாட்டில் மேடையேற்றியுள்ளார்.

இப்படி ஒரு நடிகராக,ஆரம்பித்து நாடக நெறியாளராக, அரங்கப் பயிற்சியாளராக அரங்கின் பல் துறையிலும் இயங்கிய இவரது இழப்பு ஈழத்து அரங்குக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். நாடகவியலாளராக மட்டுமல்ல சிறந்த மனிதராக, பண்பும் அன்பும் நிறைந்த ஒரு நல்ல ஜீவனாக வாழ்ந்த அவரது புகழ் ஈழத் தமிழ் அரங்க வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும்.

■ ■ ■

# நானும் ஜெனமும்...

87ம் பக்கத் தொடர்ச்சி...

கத்தில் தனியே வாழும் முதியவராக சங்கரப்பிள்ளை எனும் பாத்திரத்தை ஜெனம் அவர்கள் ஏற்று மிகவும் அற்புதமாகவும், தத்துரூபமாகவும் நடித்திருந்தார். வெளிநாட்டில் வாழும் பிள்ளைகளின் தபாலை எதிர்பார்த்து ஏங்குவதும், வெளிநாட்டிலும் பயங்கரவாதப்பிரச்சினை என்று அறிந்து வெளிநாட்டிலும் தன்பிள்ளைகளுக்கு பிரச்சினையோ என்று பதறுவதும் இப்படியாக பல காட்சிகளில் ஜெனம் அவர்கள் முத்திரை பதித்திருந்தார். இந்நாடகம் சிதம்பரநாதன் அவர்களின் நாற்சார் வீட்டில் ஒத்திகை பார்க்கப்பட்ட காரணத்தினால் அதையே ஒருவித அரங்காகக் கொண்டு பல நாற்சார் வீடுகளில் இந்நாடகம் பல தடவை மேடையேற்றப்பட்டது. இந்நாடகம் சென்னையிலும் மேடையேற்றப்பட்டது. பல இந்திய கலைஞர்கள் ஜெனம் அவர்களின் யாதார்த்தமான நடிப்பை பாராட்டிப்புகழ்ந்ததாக S.T. அரசையா கூறினார்.

### நாராய்... நாராய்:

தாசீசியஸ் அவர்கள் ஈழத்துக் கலைஞர்களைக் அழைத்துக்கொண்டு 'நாராய்... நாராய்' என்ற கலைப்பயணத்தை இந்தியாவில் மேற்கொண்டபோது அதில் முக்கிய கலைஞராக கலந்து சிறப்பித்தவர் பிரான்சிஸ் ஜெனம். நாடகமொன்றில் இவரது நடிப்பைப் பார்த்து வியந்த அப்போதைய சட்டமன்ற சபாநாயகர் தமிழ்க்குடிமகன் 'ஜெனம் தமிழ்நாட்டில் பிறந்திருந்தால் சிகரத்தைத் தொட்டிருப்பார்' என்று கூறியது குறிப்பிடத்தக்கது.

### அரங்கக் கல்லூரியின் வேறு சில நாடகங்கள்:

'பாரதியின் பாஞ்சாலிசபதம்', 'ஆர்கொலோ சதுரர்', 'கண்டனன் சீதையை' ஆகிய நாடகங்களையும் அரங்கக் கல்லூரி தயாரித்து மேடையேற்றியது.

### V.M.குகராஜாவின் 'கதை இது தான்':

V.M.குகராஜாவின் கதை, வசனம், நெறியாள்கையில் Video Vision Circle என்ற நிறுவனம் தயாரித்த இத்திரைப்படம் 1984ல் வெளியிடப்பட்டது. இத்திரைப்படத்தில் இராஜேஸ்வரன், உருத்திரேஸ்வரன், கலாலட்சுமி தேவராஜா, ஜெனம் மற்றும் பலர் நடித்திருந்தனர். இதில் ஜெனம் அவர்கள் ஒரு துறவியாக 'விரலுக்கேத்த வீக்கம் வேண்டும்' என்று தொடங்கும் தத்துவப் பாடல் பாடும் காட்சி அன்றைய வானொலி நாடகத் தயாரிப்பாளர் K.M. வாசகர் நெறியாள்கையில் விசேடமாக ஒளிப்பதிவு செய்யப்பட்டது. ஜெனம் அவர்கள் அப்பாத்திரத்திற்குரிய நடிப்பை வெளிக்காட்டியது K.M. வாசகர் அவர்களால் புகழ்ந்து பேசப்பட்டது.

### நாடகநெறியாளர் ஜெனம்:

குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் பாடசாலைப் பிள்ளைகளுக்காக எழுதப்பட்ட பல நாடகங்கள் யாழ் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி தமிழ்த்தின விழாக்களில் மேடையேற்றப்பட்டது. இந்நாடகங்களை குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களுடன் இணைந்து ஜெனம் அவர்கள் நெறியாள்கை செய்திருந்தார்.

குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களால் பிரதியாக்கம் செய்யப்பட்டு நல்லூர் கல்வி வள நிலையத்தினரால் தயாரிக்கப்பட்ட தியாகத்திருமணம் என்னும் இந்நாடகத்தை ஜெனம் அவர்கள் முழுமையாக நெறியாள்கை செய்திருந்தார். 31.10.1986ல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் மேடையேறி பின் பல பாடசாலைகளில் மேடையேற்றப்பட்டது. இந்நாடகத்தில் பல நாட்டார் பாடல்கள் சேர்க்கப்பட்டிருந்தது. ஜெனம் அவர்களுக்கு நாட்டுக்கூத்துப் பாடல்களில் பரீட்சயம் இருந்த காரணத்தினால் நாட்டுக்கூத்து பாடல் மெட்டுக்களை நாட்டார் பாடல்களிற்கு மெருகேற்றி பாட வைத்திருந்தார். நாடகம் வெற்றிகரமாக அமைந்தது. இந்நாடகத்தில் அரங்கக் கல்லூரி சார்பில் பங்கேற்ற மூவருள் நானும் ஒருவன் என்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

### நினைக்க - இனிக்க - மறக்க:

நாடக அரங்கக் கல்லூரியின் களப்பயிற்சி திருநெல்வேலி இந்து இளைஞர் சங்க மண்டபத்திலும் நாடக ஒத்திகைகள் கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம், பெரியபுலம் மகாவித்தியாலயம், செங்குந்த இந்துக்கல்லூரி ஆகிய பாடசாலைகளிலும் நடைபெற்றது. ஒத்திகைகள் முடிந்ததும் நாங்கள் குறிப்பாக நான், அரசையா, சுந்தா, ஜெனம் ஆகியோர் எங்களது சைக்கிளில் வந்து அரங்க கல்லூரி செயலதிபர் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் வீட்டில் தரித்து நின்று இரவு 9மணிவரை நாடகங்கள் பற்றியும் முன்பு நடித்த நாடக அனுபவங்கள் பற்றியும் கலந்துரையாடியபின் வீடு நோக்கிச் செல்லுவோம். இது ஒரு வழமையான நிகழ்வாகும். நாடக ஒத்திகைக்கு ஒரு நாளும் ஜெனம் அவர்கள் நேரந்தவறுவதில்லை. ஒத்திகையின் பொழுதும் ஒழுக்கமாகவும், அமைதியாகவும் இருந்து தனது ஒத்திகை பயிற்சியை மேற்கொள்வார். இது ஏனையோருக்கு முன்மாதிரியாகவும் பாடமாகவும் அமைந்தது. எமக்கு நாடகமே சிந்தனையாகவும் அந்த நாட்கள் இனிமையானதாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

காலங்கள் ஓடின... நாட்டில் அசாதாரண சூழ்நிலை நிலவியது. மக்கள் பாதுகாப்புத் தேடி வேறு வேறு மாவட்டங்களிற்கு இடம் பெயர்ந்தும், வேறு வேறு நாட்டிற்கு புலம் பெயர்ந்தும் வாழ முற்பட்டனர். ஜெனம் அவர்கள் குடும்பமும் இதற்கு விதிவிலக்கல்ல. ஜெனம் அவர்களது குடும்பமும் இடம்பெயர்ந்து கொழும்பு வத்தளைக்கு குடிபெயர்ந்தது. 1994ம் ஆண்டு குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் தொகுத்த பாரதியின் பாஞ்சாலி சபதம் என்னும் நாடகத்தை S.T. அரசு அவர்களின் நெறியாள்கையில் 1994ம் ஆண்டு பல இடங்களில் மேடையேற்றினோம். ஜெனம் இல்லாதது எமக்கு பெரும் குறையாகவும், கவலையாகவும் இருந்தது.

நான் ஒருமுறை கொழும்பு சென்றவேளை வத்தளைக்கு சென்று ஜெனம் அவர்களை சந்திக்கவேண்டும் என்று எனது மனம் அவாவியது. தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்து விட்டு பயணமானேன். வீட்டிற்கு அருகே நின்று கொண்டு கைபேசி மூலமாக அவரது மனைவியாருக்கு தகவல் கொடுத்து வீட்டை அடையாளங் கண்டு உள்ளே சென்ற வேளை ஒரு இனிமையான பாடல் மூலம் ஜெனம் அவர்கள் என்னை வரவேற்றார்.

*'வாரும் தோழரே வாரும் - எனது*
*அருமை நண்பரே வாரும் - எங்கள்*
*நாடக நடிகரே வாரும்'*

என்று இனிமையாக பாடி வரவேற்றார். உள்ளே சென்றோம். அரைமணி நேரம்வரை உரையாடி மகிழ்ந்தோம். இத்தனைக்கும் அவர் தனது இரண்டு கண்களின் பார்வையையும் இழந்து இருந்தார். இருந்தாலும் அவரது முகத்தில் பழைய மகிழ்ச்சி தாண்டவமாடியதை அவதானித்தேன். ஒரு வேளை பழைய நாடகநடிகரைச் சந்தித்த மகிழ்ச்சியோ தெரியாது. அரைமணிநேரத்தின் பின் மகிழ்ச்சியான உரையாடலை முடித்துக்கொண்டு கனத்த இதயத்துடன் ஒரு நாடக ஆளுமையை சந்தித்துவிட்டு விடைபெற்றேன்.

நாட்டில் எத்தனையோ மாற்றங்கள். அண்மையில் எனது நண்பரும், எழுத்தாளர் மற்றும் நாடக ஆர்வலருமான கலைஞர் ப. ஸ்ரீஸ்கந்தன் அவர்கள் 2017.04.24ம் திகதியன்று வத்தளை சென்று ஜெனம் அவர்களை பார்த்து கதைத்துவிட்டு எனக்கு தகவல் தந்தார். அதன்பின் 2017.04.29ம் திகதியன்று காலை எமது சக நடிகரும், சட்டத்தரணியுமான சோ.தேவராஜா அவர்கள் ஜெனம் அவர்கள் மறைந்து விட்டார் என்ற சோக செய்தியை தொலைபேசி மூலம் அறிவித்தார். ஒரு கணம் நானும், ஜெனமும் பழகிய நாட்களும், நடித்த நாடகங்களும் அவரது இனிமையான சுபாவமும், எவரையும் புண்படுத்தாத அவரது மனமும் எனது மனதில் சுழன்றோடியது.

ஜெனம் மறைந்துவிட்டார். மிகப்பெரிய நாடக ஆளுமை. எத்தனையோ நாடகங்களில் நடித்த பெருமைக்குரியவர். நாடகக் கலை வளர்ச்சிக்காக தன்னையே அர்ப்பணித்த ஒரு பெருந்தகை. நாடக ஆற்றுகைக்காக பல உயரிய விருதுகளையும் பட்டங்களையும் பெற்றவர். எத்தனையோ வளரும் கலைஞர்களுக்கு பாடமாக அமைந்தவர் எம்மைவிட்டு மறைந்துவிட்டார். அவர் நினைவு என்றும் எம்மனதில் நிற்கும்.

ஜெனம் அவர்களது புகழ் வாழ்க நாடகக் கலை வளர்க.

■ ■ ■

# இது இவருக்கு மட்டுமே பொருந்தும்


**A. ரகுநாதன்**



பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் மூத்த கலைஞர். மேடை, வானொலி, தொலைக்காட்சி நாடக, திரைப்பட, குறுத்திரைப்பட நடிகர். நெறியாளர். தயாரிப்பாளர்.


1960 களின் முற்பகுதி.

ஈழத்து நாடகத் தந்தை அமரர் கலையரசு சொர்ணலிங்கம் ஐயா தலைமையில் J.S. S.A உதைபந்தாட்ட சம்மேளனம், யாழ். வீரசிங்கம் மண்டபம் போன்ற பல அமைப்புகளின் ஸ்தாபகரான அமரர் P.செல்வரட்ணம் நிர்வாகத்தில் நடைபெற்ற ஓரியன்ட் விடையாட்டுக் கழக வருடாந்த விழாவின் திட்டமிடல்களுக்காக யாழ்ப்பாணம் 3ம் குறுக்குத் தெருவில் ஒரு மண்டபத்தில் பெரும் கலைஞர் அமரர் K. செல்வரட்னம் (விதானையார்), நாடக எழுத்தாளரும் நடிகரும் இயக்குனருமாகிய பேராசிரியர் குழந்தை சண்முகலிங்கம், நாடக, திரைப்பட நடிகர் டி. ராஜேஸ்வரன் (டாக்சி டிரைவர் பட நாயகன்), நடிகர், நாடக நெறியாளர், புகைப்பட கலைஞர், மாமனிதர் அமரர் S.T அரசு போன்ற பெரும் கலைஞர்கள் இருந்த அந்த மண்டபத்திற்கு கடந்த 6, 7 தலைமுறைகளாக தன்னை கலைஞர் என்று கூறிக்கொள்ளும் அத்தனை ஈழத்துக் கலைஞர்களின் முகங்களுக்கெல்லாம் ஒப்பனை செய்து அழகுபடுத்திய வரும், காட்சி சோடனை அமைப்பாளருமாகிய அமரர் பெஞ்சமின் ஒரு இளைஞனை அழைத்து வந்து, இவர் நல்ல பிள்ளை நல்ல கலைஞர் என்று அறிமுகப்படுத்தினார்.

அவர் தான் பிரான்சிஸ் ஜெனம்.

அன்று ஆரம்பித்த கலைப் பயணத்தில் இருந்து, அவர் நோய் வாய்ப்பட்டு, கண் பார்வை இழந்து படுக்கையில் இருக்கும் வரை பிரகாசித்ததை நான் கண்டு மகிழ்ந்து, வியந்து, பிரமித்திருக்கிறேன். 1947 முதல் நாடகங்களிலும், 1963 முதல் திரைப்படங்களிலும் வானொலி, தொலைக்




காட்சி நாடகங்களிலும் தொடர்ந்து பங்காற்றி வருகிறேன். தாய் மண்ணிலும் புலம் பெயர் மண்ணிலும் கலைஞனாகவும், ரசிகனாகவும் வாழ்ந்தவன் நான். வாழ்பவன் நான். இதில் பிரான்சிஸ் ஜெனம், K.S. பாலச்சந்திரன், கண்டி விஸ்வநாதராஜா ஆகிய அற்புதமான குணச்சித்திர கலைஞர்களின் மிகப் பெரிய ரசிகன்.

பிரான்சிஸ் ஜெனம் பல மாறுபட்ட குணச்சித்திர வேடங்களில் நடித்து ஈழத்து ரசிகப் பெருமக்களை பெரிதும் கவர்ந்தவர். என் தயாரிப்பு நிர்வாகத்தில் உருவான நாடகங்களாகிய இன்பநாள், ஆராவமுது, அசடா, மல்லியம் மங்களம், அசோகன் காதலி, பாவிகள், வேதாளம் சொன்ன கதை, தேரோட்டி மகன், கொலைகாரன் தீர்ப்பு, வாடகைக்கு அறை போன்ற பல நாடகங்களிலும் நிர்மலா, தெய்வம் தந்த வீடு போன்ற திரைப்படங்களிலும் நடித்து ஈழத்து தமிழ் நெஞ்சங்களின் பாராட்டுகளையும் பெற்ற ஒரு அற்புதமான கலைஞன்.

அன்பும் அடக்கமும் பண்பும் அதிர்ந்து பேசாதகுணமும், நிகரற்ற கலை ஆற்றலும், பொறுமையும், நிதானமும் மற்றவர்களுக்கு உதவும் பண்பும் நிறைந்த என் உடன் பிறவா தம்பி பிரான்சிஸ் ஜெனம், 'ரகு அண்ணா' என்று அழைத்த அந்த கணீரென்ற அன்புக்குரல் இந்த நிமிடம் வரையும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

பல மேடை நாடகங்களில் சாதனைகள் புரிந்து, பின்னர் அருட்தந்தை நாடகக் கலைஞர் மரியசேவியர் அவர்களுடன் இணைந்து தமிழில் மூத்த கலையாகிய நாட்டுக் கூத்தில் சாதனை புரிந்தவர்.

1970ல் ஆரம்பத்தில் தினகரன் நாடகப் போட்டியில் சிறந்த துணை நடிகனாக தெரிவுசெய்யப்பட்டு, இந்தியாவில் குணச்சித்திர நடிகை சௌகார் ஜானகி அவர்களில் கையால் 'கொலைகாரன்' நாடகத்திற்காக பரிசு பெற்றதுடன், இன்னும் பல நாடகங்களில் பரிசில்கள், பாராட்டுக்கள், விதந்துரைகள் பெற்று வாழ்ந்த என் உடன் பிறவாத தம்பி - கலைக்கண்மணி பிரான்சிஸ் ஜெனம் என்ற பெயர், ஈழத்தின் தமிழும், தமிழ்க்கலைகளும் இருக்கும் வரை சிரஞ்சீவியாக ஒலித்துக் கொண்டேயிருக்கும்.

வாழ்க அவர் புகழ்.

■ ■ ■

# சிறந்த அரங்கவியலாளர் பிரான்சிஸ் ஜெனம்


**ஆனந்தராணி பாலேந்திரா**



வானொலி, மேடை நாடக, திரைப்படக் கலைஞர், நிகழ்ச்சித் தொகுப்பாளர். தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகத்தில் முக்கிய பங்குவகிப்பவர் லண்டனில் சிறுவர்களுக்கான நாடகப்பள்ளியை நடத்திவருபவர்.


ஈழத்து தமிழ் நாடக உலகில் மிக ஆளுமை மிக்க ஒரு கலைஞராகத் திகழ்ந்தவர் திரு. பிரான்சிஸ் ஜெனம். பல தசாப்தங்களாக பல்வேறு வகை நாடகங்களில் நடித்து பல்லாயிரக்கணக்கான நாடக ரசிகர்களின் பாராட்டுகளைப் பெற்ற அவர், பெருமையில்லாத, மிகவும் தன்னடக்கம் கொண்ட ஒரு உன்னத கலைஞர்.

இவ்வருடம் மார்ச் மாதம் 27ம் திகதி மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக்கழக விபுலானந்தர் அழகியற் கற்கை நிறுவகம் நடத்திய உலக நாடக தின ஆரம்ப விழாவில் நான் சிறப்புரையாற்றியிருந்தேன். பெண் பாத்திரங்களை மையமாகக் கொண்ட எனது உரையில் திரு. பிரான்சிஸ் ஜெனம் அவர்களைப் பற்றியும் கூறியிருந்தேன். அறுபதுகளில், 'கர்ணன்' நாடகத்தில் அவர் குந்திதேவி பாத்திரமேற்று எல்லோரும் வியக்கும் வண்ணம் நடித்தது பற்றி எனது கணவர் பாலேந்திரா அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறேன். சில வாரங்களில் அவர் இறந்த செய்தி அறிந்து மனம் கலங்கிப் போனேன்.

முதன் முதலில் திரு. ஜெனம் அவர்களை நான் சந்தித்தது யாழ்ப்பாணத்தில் மகாகவியின் 'கோடை' நாடக ஒத்திகையின் போதுதான். அந்த நேரத்தில் பாலேந்திரா நெறியாள்கை செய்த 'மழை', 'நட்சத்திர வாஸி', 'கண்ணாடி வார்ப்புகள்' போன்ற நாடகங்களில் நான் நடித்திருந்தேன். தமிழ் அவைக்காற்று கலைக் கழக ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராகவும் இருந்தேன்.

யாழ்ப்பாணத்தில் நாடக அரங்கக் கல்லூரி தனது முதலாவது நாடகமாக 'கோடை' நாடகத்தைத் தயாரித்தபோது திரு. குழந்தை சண்முகலிங்கம் அவர்கள் அந்த நாடகத்தில் செல்லம்மா என்ற பாத்திரத்தில் நடிப்பதற்கு என்னை அணுகினார். தமிழ்ப் பெண்கள் மேடையில் நடிப்பதற்கு மிகவும் தயங்கிய காலம் அது. 'கோடை' நாடகத்தில் திரு. ஜெனம் அவர்கள் பிரதான பாத்திரத்தில் நடித்தார். ஒத்திகைகளின்போது ஜெனம் அவர்களின் பண்பட்ட நடிப்பைப் பார்த்து வியந்து போனேன். நல்ல கணீரென்ற குரல், சிறந்த முகபாவத்துடன் ஒரு தலை சிறந்த நடிகராகப் பரிணமித்தார். ஒரு நல்ல நடிகராக மட்டுமல்லாது ஒரு நல்ல மனிதராகவும் அவர் இருந்தார். மிகவும் அன்போடும் பண்போடும் பழகுவார். எப்போதும் நல்ல கலகலப்பாக உற்சாகத்தோடு இருப்பார். கூட இருப்பவர்களையும் உற்சாகப்படுத்துவார். அவர் மிக அனுபவம் மிக்க மூத்த கலை




ஞராக இருந்தபோதும் ஒத்திகைகளின் போது இளையவர்கள் எங்களுக்கு நல்ல ஒத்துழைப்பு வழங்கி ஊக்கப்படுத்துவார். அந்த நாடகம் நன்றாக வருவதற்கு சிறப்புற வழிவகுத்தவர்களுள் முக்கியமானவர் திரு. ஜெனம் அவர்கள். 'கோடை' நாடகம் 02.03.1979 அன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேறி பெரும் வரவேற்பைப் பெற்றது. இந்நாடகத்தில் எங்களுடன் ரீ.எஸ்.லோகநாதன், ஏ.ரீ.பொன்னுத்துரை, பேர்மினஸ், கௌரி வேதநாயகம், சண்முகநாதன், தனபாலசிங்கம், செந்தீஸ்வரன் ஆகியோரும் நடித்திருந்தனர். திரு.வீ.எம். குகராஜா நெறியாள்கை செய்திருந்தார்.

இரண்டாவது தயாரிப்பாக வீ.எம். குகராஜா அவர்கள் எழுதி நெறிப்படுத்திய 'அவள் ஏன் கலங்குகிறாள்' என்ற நாடகத்தில் திரு. பிரான்சிஸ் ஜெனம் அவர்கள் தந்தையாகவும் நான் அவருடைய மகளாகவும் நடித்திருந்தேன். நாடகத்தில் மட்டுமல்லாது ஒத்திகைக் காலங்களிலும் அவர் என்னை ஒரு மகளாகவே நடத்தினார்.

திரு. ஜெனம் அவர்கள் சிறந்த ஒரு அரங்கவியலாளராக தன் வாழ்நாளில் பெரும் பகுதியை நாடகக் கலைக்கு அர்ப்பணித்து வாழ்ந்தவர். அவரின் மறைவு ஈழத்து தமிழ் நாடகத் துறைக்கு பேரிழப்பாகும்.

அவரது புகழ் என்றும் நிலைத்திருக்கும்.

■ ■ ■

# திருமறைக் கலாமன்றத்தின் சுவடுகளில்...

யோ. யோண்சன் ராஜ்குமார்

யாழ். திருமறைக் கலாமன்ற முக்கிய நிர்வாகி. மன்றம் தயாரித்த நாடகங்கள் பலவற்றில் நடித்தவர். நெறியாளர். கூத்து, நாடக எழுத்தாளர். கூத்துக்கலையில் அதிக ஈடுபாடு கொண்டவர்.



ஈழத்தின் அரங்கப்புலத்தில் ஆளுமையு டன் செயற்பட்டு அரங்கின் மறுமலர்ச்சிக்கு உதவிய கலைஞர்களில் பிரான்சிஸ் ஜெனம் தனித்துவமானவர். இவரது தனித்துவமென் பது ஈழத்தின் அரங்க நீரோட்டத்தின் ஒவ்வொரு ஊற்றுக்களிலும் பயணம் செய்து அவற்றினைத் தம்வசப்படுத்திய தனித்து வங்களால் நடிப்பாலும் நெறிப்படுத்தலா லும் மேலெழுந்த வகையில் முதன்மைப் பட்டு நிற்பதாகும். இது அவரை ஒரு முன் மாதிரியாக கொள்ள வைத்திருக்கின்றது. அவரின் இடைவெளி ஈழத்தின் அரங்கப் பரப்பில் நின்று நிலைக்கப் போகின்றது. அந்தவகையில் அவரது ஒவ்வொரு பணியாற்றுகைக் களங்களையும் உற்று நோக்குதல் பொருத்தமானதாகும்.

திருமறைக்கலாமன்றத்தினை நீ.மரியசேவியர் அடிகள் 1963ம் ஆண்டில் உருவாக்கினார். ஆனால், 1965ம் ஆண்டுக்குப் பின்னரே அப்பெயருடன் இயங்கத்தொடங்கினார். மரிய சேவியர் அடிகள், சிறுவயதில் இருந்தே கலையின்பால் ஆர்வங் கொண்டிருந்த ஒருவர். கலையினூடாக தான் பணியாற்றக் கிடைத்த பங்குத்தளங்களில் இருந்த பலவகைப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முற்பட்டார். அதில் வெற்றியும் கண்டார். அதுமட்டுமன்றி, ஆற்றல் மிக்க கலைத்திறன் வாய்ந்தவரை இனங்காணுந் திறனும் அவரிடம் காணப்பட்டது. தான் செல்லுகின்ற இடங்களில் நல்ல நடிகரைக் கண்டுவிட்டால் அவருடன் தொடர்புகொண்டு தனது நாடகங்களுக்கு கொண்டுவந்துவிடுவார். அந்தவகையில் 1966 அளவில் அவரால் இனங்காணப்பட்ட நடிகரே பிரான்சிஸ் ஜெனம். 1966ல் யாழ்ப்பான ஆசனக் கோவில் வெளியில் திருப்பாடுகளின் காட்சி ஒன்று நிகழ்த்தப்பட்டது. அதில் பிரான்சிஸ் ஜெனம் கைப்பாசாக நடித்தார். அவரது நடிப்பு இவரை வெகுவாக கவர்ந்து விடவே அவரைத் தொடர்பு கொண்டு தனது நாடகத்தில் நடிப்பதற்கு கேட்டுள்ளார். அவர் உடனே தனது விருப்பத்தினை தெரிவித்ததில் இருந்து திருமறைக் கலாமன்றத்துக்கும் அவருக்குமான உறவு ஆரம்பித்தது.

## நடிகனாக:

1967ம் ஆண்டு உரும்பிராயில் திருமறைக் கலாமன்றம் மேடையேற்றிய கல்வாரியில் கடவுள் நாடகத்தில் பரிசேயன் பாத்திரத்தில் நடித்தார். தொடர்ந்து திருமறைக்கலாமன்றம் தயாரித்த காட்டிக்கொடுத்தவன் நாடகத்தில் மிகமுக்கியமான பாத்திரமாகிய யூதாசின் மனச்சாட்சிப் பாத்திரத்திற்கு நடித்தார். முகமெல்லாம் வெள்ளையைப் பூசிக்கொண்டு யூதாசின் குற்றத்தினை சுட்டிக்காட்டி அவனை தூக்கு மரம் ஏறும் வரை துரத்திச்செல்லும் பாத்திரமாக, அற்புதமாக நடித்துப் பலரது பாராட்டுக்களையும் பெற்றார். தொடர்ந்து பல திருப்பாடுகளின் காட்சிகளில் இயேசுவை தீர்ப்பிடும் பரிசேயர்களின் தலைவனுக்கு நடித்தார். அதனைத் தொடர்ந்து களங்கம் என்னும் நாடகம் 1968ல் மரியசேவியர் அடிகள் எழுதிய மிக முக்கியமான நாடகம். இதில் இயேசுவைக் காட்டுவதில்லை. சம்பவங்கள் எல்லாம் ஊமத்தில் நிகழ்த்தப்படும். இயேசுவின் மரணத்திற்கு யார் காரணம் என்று இரண்டு சட்டத்தரணிகள் ஆய்வு செய்வார்கள். அதில் நடுவராக ஜெனம் நடித்தார். மிகவும் முக்கியமான அப்பாத்திரம் எல்லோர் மனங்களிலும் நிறைந்து நின்றது. 1971ல் அன்பில் மலர்ந்த அமர காவியம் என்னும் பெயரில் யாழ்பாணக் கோட்டை மதில்களை மேடையாகக்கொண்டு பிரமாண்டமான படைப்பாக திருமறைக் கலாமன்றம் அதனை தயாரித்தபோது சென்றசபைத் தலைவனாக அதிலும் நடித்துப் பாராட்டுப்பெற்றார். 1972ம் ஆண்டு திருமறைக்கலாமன்றம் இந்தியாவுக்கான கலைப் பயணத்தினை மேற்கொண்ட போது திருச்சி தேவர் மண்டபத்தில் 'களங்கம்' மேடையேற்றப்பட்டு பலராலும் பாராட்டப்பட்டது. ஈழத்தில் இருந்து தமிழகத்திற்கு நாடகக் குழுவொன்று சென்றது அதுவே முதற்தடவை என்பர்.

திருமறைக் கலாமன்றத்தின் மற்றொரு முக்கியமான நாடகம் அளவுகோல். பூவுலகத்தினையும் மேலுலகத்தினையும் இணைக்கின்ற ஒரு நாடகம். அதில் ஜெனம் இராயப்பராக நடித்தார். வானுலகத்தில் அதன் திறப்புக் கோர்வையுடன் நின்று



அவர் செய்யும் பந்தா மிகவும் அற்புதமாக இருக்கும் என மூத்த கலைஞர்கள் கூறுகின்றனர். தொடர்ந்து எழுதிய கரம் என்னும் நாடகம் பாவிப்பெண்ணின் கதாபாத்திரத்தினை முக்கியத்துவம் செய்யும் நாடகமாகும். அதில் அவர் பரிசேயனாக பாவிப் பெண்ணை குற்றஞ்சாட்டும் எள்ளலும் வில்லத்தனமும் மிக்க பாத்திரமாக வருவார்.

திருமறைக்கலாமன்றம் நீண்ட மேடைகளில் மேடையேற்றிய திருப்பாடுகளின் காட்சியை படச்சட்ட மேடையில் நாடக அமைப்புக்குள் மிகவும் நுட்பமான முறையில் பலிக்களம் என்னும் பெயரில் தயாரித்து, இலங்கை முழுவதிலும் கொண்டு சென்று மேடையேற்றிய போது அதில் தலைவன் பாத்திரமாக நடித்தார். அவரது தொடக்க வசனம் "என்ன சபையோரே என்ன இன்னுமா தீரவில்லை உங்கள் கலக்கம் இன்று தூக்கு மேடையில் நிறுத்தப்பட்டிருப்பது நமது அரசியல் உரிமையல்ல..." என்ற வசனத்தினை சொல்வதுடன் ஆரம்பமாகும், அப்போது செனற் சபை களைகட்டும் என்பார்கள். இப் பலிக்களம், வீடியோத்திரைப்படமாக வெளிப்புறக்காட்சிகளுடன் 1982ம் ஆண்டு தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. அதுவே யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட முதல் வீடியோத் திரைப்படம். அதில் தலைவன் பாத்திரமாக ஜெனம் நடித்தது மட்டுமன்றி அதன் உருவாக்கத்திலும் பெரும்பங்கெடுத்தார். இவற்றுக்குப் பின் அவர் நாடக அரங்க கல்லூரியின் நாடகங்களுடன் அதிக நேரத்தினைச் செலவிட்டதனாலும் பல்வேறு பாடசாலைகள் பங்குத்தளங்களில் நாடகங்களை நெறிப்படுத்தியதாலும் நாடகங்களில் நடித்தவைகள் குறைவு. ஆனால் திருமறைக் கலாமன்றத்தின் நிர்வாக சபை உறுப்பினராகவும் பொருளாளராகவும் தொடர்ந்து பணியாற்றி மன்றத்தின் இயக்கத்திற்கு உறுதுணையாக நின்றார். அக்காலத்தில் மரியசேவியர் அடிகள் யேர்மனியில் இருந்து எழுதிய 'கலைமுகம்' என்னும் அரங்கியல் கட்டுரைகளின் தொகுப்பு நூலை இவரே முன்னின்று பதிப்புச்செய்தார்.

1988ல் மரியசேவியர் அடிகள் தமது கலாநிதிப்பட்டப் படிப்புக்களை முடித்துக் கொண்டு இலங்கை வந்து திருமறைக் கலாமன்றத்தினை மீளமைப்புச்செய்து, சமயம் சாராது பண்பாட்டுத் தளத்தில் பல்வேறு பணிகளையும் ஆற்றுகின்ற நிறுவனமாக (Centre For Performing Arts) மாற்றியபோது பிரான்சிஸ் ஜெனம் அவர்களின் பங்களிப்பு மிகவும் காத்திரம்மிக்கதாக இருந்தது. அதில் நாட்டுக்கூத்துக்கு புத்துயிர்பினை ஏற்படுத்தும் வகையில் புதிய கூத்துக்கள் தயாரிக்கும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டபோது 'நீ ஒரு பாறை' என்னும் புதிய தென்மோடிக்கூத்து ஒன்றினை அண்ணாவியர் பாலதாஸ் எழுத மரியசேவியர் அடிகளின் மேற்பார்வையில் மேடையேற்றினர். அக்கூத்தில் ஜெனம் மந்திரவாதியாக நடித்தார். பேயோட்டும் மந்திரவாதியாக ஆடலோடு நடித்து எல்லோருடைய பாராட்டினையும் பெற்றுக் கொண்டார். இந்நாடகம் பல்வேறு இடங்களிலும் மேடையேற்றப்பட்டதுடன் இலங்கை ரூபவாகினி தேசிய தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகியமை குறிப்பிடத்தக்கது.

1989ல் களங்கம் நாடகத்தினை இவரே நெறிப்படுத்தினார். அதில் நடுவர் பாத்திரத்தினை ஏற்று பலரது பாராட்டுக்களையும் பெற்றார். அந்நாடகமும் இலங்கை ரூபவாகினி தேசிய தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்யப்பட்டு பலரது பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டது. பின்னர் 1993ம் ஆண்டு கல்வாரிப்பரணி என்னும் பாடுகளின் நாடகத்தில் பிலாத்துவாக பாத்திரம் ஏற்றார். அப்பாத்திரம் யேசுவுக்குத் தீர்ப்பு வழங்குகின்ற ஆளுனன் பாத்திரம். அதற்கு ஒருபொதுவான கையிருப்புப் பாத்திர (Stock Character) முறைமைதான் காணப்பட்டது. முதன் முதலாக அப்பாத்திரத்திற்கு வேறுபட்ட நடிப்பினூடான புதிய பரிமாணத்தினை தோற்றுவித்தார். யாழ்ப்பாணத்தில் அவர் செயற்பட்ட காலத்தில், திருமறைக் கலாமன்றத்தின் மூத்த கலைஞர்களான ஜி.பி. பேர்மினஸ், ஜெகநாதன் ஏ.வி. ஆனந்தன், என்.எஸ். ஜெயசிங்கம், தைரியநாதன், ம. யேசுதாசன், இம்மனுவேல், கிறகரி தங்கராஜா... எனப் பலருடனும் அவர் மிக நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார் இவர்கள் ஒன்றாக கூடும் பொழுதுகள் மிகவும் மகிழ்ச்சியான பொழுதுகளாக இருக்கும் என மூத்தகலைஞர்கள் கூறிக்கொள்கின்றார்கள்.

அதற்குப்பின் அவர் நடிப்பதற்கான சந்தர்ப்பம் மிகவும் குறைவாகவும் நெறிப்படுத்துபவராகவும் மட்டுமே செயற்பட்டார். 1998ம் ஆண்டு கவிஞர் முருகையனின் இருதுயரங்கங்கள் என்னும் நாடகத்தினை அவரே நெறிப்படுத்தித் அதில் வைத்தியராக இவரும், செல்வந்தனாக சக்திதரன் அவர்களும் நடித்தனர். அந்நாடகம் பல இடங்களிலும் மேடையேற்றப்பட்டது. 1999ம் ஆண்டு திருமறைக்கலாமன்றம் மேற் கொண்ட ஐரோப்பிய கலைப்பயணத்தில் தான் அவர் இறுதியாக நடித்தார் எனலாம். 1999ம் ஆண்டு திருமறைக் கலாமன்றம் 7 கலைஞர்களுடன் 'யாதுமூரே' என்னும் பெயரில் மேற்கொண்ட ஐரோப்பிய கலைப் பயணத்தில் இணைந்துகொண்டு அக்குழுவுக்கு பிரான்சிஸ் ஜெனம் அவர்களே தலைமை தாங்கிச்சென்றார். அப்பயணத்தில் கவிஞர் முருகையனின் இருதுயரங்கள், கவிஞர் சிவசேகரத்தின் கெக்குளோ ராசன் வழக்கு தீர்த்த கதை, பூதத்தம்பி, வலியவனும் சிறியவனும் ஆகிய நாடகங்கள் அவரது நெறியாள்கையிலேயே மேடையேற்றப்பட்டன. அதில் இருதுயரங்களில் வைத்தியராகவும் கெக்குளே ராசனில் திருடன், குயவன் ஆகிய பாத்திரங்களிலும் பூதத்தம்பியில் அட்மிரல் பாத்திரத்திலும், வலியவனும் சிறியவனும் என்ற வார்த்தைகளற்ற நாடகத்தில் கோலியாத்தாகவும் நடித்தார். பிரான்ஸ் யேர்மனி நெதர்லாந்து, சுவிற்சிலாந்து ஆகிய நாடுகளில் இந்நாடகங்கள் மேடையேற்றப்பட்டு பலராலும் பாராட்டப்பட்டது. அதுவே அவர் வாழ்வில் இறுதியாக நடித்த நாடகங்களாகவும் ஆகின.

பிரான்சிஸ் ஜெனம் அவர்களின் சிறப்பு அவரது அபரிதமான நடிப்புத்திறனே. சினிமாப்பாணி நாடகம், யதார்த்த நாடகம், இலக்கிய நாடகம், நாட்டுக்கூத்துக்கள் (தென்மோடி, வடமோடி, வடபாங்கு), மோடியுற்ற நாடகங்கள் என... பல்வகைப்பட்ட நாடகங்களிலும் கலையசு சொர்ணலிங்கம், எஸ்.ரி. அரசு, மரியசேவியர் அடிகள், சுஹைர் ஹமீட், குழந்தை ம. சண்முகலிங்கம், அ. தாசீசியஸ், நா. சுந்தரலிங்கம், சி. மௌனகுரு, வி.எம்.குகராஜா, க.சிதம்பரநாதன்... என ஈழத்தின் மைற்கற்களாக அமைந்த நெறியாளர்கள் அனைவரின் கீழும் நடித்த அவருடைய அனுபவமானது அவரை நன்கு செதுக்கியதுடன் எவ்வகை நாடகங்களிலும் நடிக்ககூடிய நடிப்பு ஆளுமையை அவருக்கு வழங்கின. 'நடிகன் மேடையில் விளையாட்டு மைதானத்தில் நிற்கும் விளையாட்டு வீரனைப்போல் இருக்கவேண்டும்' என்று அடிக்கடி கூறுவார். ஏந்தையும் தாயும் நாடகத்தில் பெரியையா பாத்திரத்தினை அவர் நடிக்கும் போது பார்ப்பவர்கள் கண்கள் ஒருநேரத்தில் குளமாகும் ஆனால் அவர் வெளியே பாத்திரமாக நின்று கொண்டு உள்ளே தன்னளவில் எந்த நெருடலும் இல்லாது நடித்தமைபற்றி அவருக்கு நினைவூட்டுனராக இருந்த விரிவுரையாளர் திலகநாதன் கூறுவார். ரஷ்ய நெறியாளர் மேயஹோல்ட், யேர்மனிய நெறியாளர் பேத்தொல்ட் பிரக்ட் போன்றோரின் நடிப்புக் கோட்பாடுகள் அவரில் முழுமை பெற்றிருந்தமையை உடன் பயணிகள் உணர்ந்து கொள்வர்.

## நெறியாளனாக:

பிரான்சிஸ் ஜெனம் அவர்களின் மிகமுக்கியமான மற்றொரு ஆளுமை அவரது நெறியாக்கத்திறன் ஆகும். அவர் அதுவரை கடந்துவந்த பல்வேறு அரங்குகளினதும் அவர் நடித்த பல நாடக நெறியாளர்களில் இருந்து கற்றுக்கொண்டதுமான ஒட்டுமொத்த விடயங்களினதும் தொகுப்பில் இருந்து தனித்துவமாக உருவாகிய நெறியாளனாக பிரான்சிஸ் ஜெனம் காணப்பட்டார். அபரிமிதமான கற்பனை வளம் அவரிடம் இருக்கும். நடிக்க முடியாது செல்லும் எவரையும் நடிக்க வைத்துவிடுவார். அவரிடம் எத்தகைய திறமைகள் இருக்கின்றனவோ. அதையெல்லாம் பயன்படுத்துவார். கண்டிப்பாகவும் அதேவேளையில் மிகவும் சுதந்திரம் வழங்கியும் இருவேறு தன்மைகளையும் பொருத்தமாக பயன்படுத்துவார். அத்தகைய ஆளுமைகளுடனேயே நாடகப்பட்டறைகளையும் நடத்துவார்.

திருமறைக்கலாமனறத்தில் மிக நீண்ட காலமாக மரியசேவியர் அடிகளே நாடகங்களை நெறிப்படுத்தி வந்தார். அவருக்குப்பின் அவர் நெறியாளனாக நியமித்தது பிரான்சிஸ் ஜெனத்தினையே. 1989ல் களங்கம் நாடகத்தினை இவரே நெறிப்படுத்தினார். அதனைத் தொடர்ந்து நாடக

தொடர்தல் 91ம் பக்கம்

# ஜெனம் எனுமோர் நாடகன்

- சோக்கல்லோ சண்முகநாதன் -

நவீன ஆட்டக் கூத்துக் கலைஞன் பிரான்சிஸ் ஜெனம் அவர்கள் அமரரான செய்தி எனக்கு அரங்காடல் நாடக மேடையில் வைத்துச் சொல்லப்பட்டது. அன்று எனது நடிப்பை அம்மாபெரும் கலைஞனுக்கு அர்ப்பணித்து நடித்தேன். இதை மட்டுமே என்னால் அன்று உடனடியாகச் செய்யமுடிந்தது.

மிகவும் ஒழுக்கமான அன்பான பண்பாடான கலைஞன் பிரான்சிஸ் ஜெனம். ஆரம்ப காலங்களில் பெண்வேடம் தாங்கி நடித்த ஜெனம் பின்நாளில் நவீன ஆட்டக்கூத்து வரை நடித்து முடித்தார். இவர் தாங்கி நடிக்காத வேடங்களே இல்லை என்று சொல்லலாம்.

திருநெல்வேலி யாழ்.நாடக அரங்கக் கல்லூரியில் தான் பிரான்சிஸ் ஜெனத்தை முதன் முதலில் சந்தித்தேன். தாசிசியாஸ், குழந்தை சண்முகலிங்கம் கல்லூரியில் ஆசிரியர்கள். ஜெனமும் எங்களுக்கு வகுப்பு எடுத்திருக்கின்றார். ஜெனத்திடம் கூத்துப் பழகுவது இன்பமாகவிருக்கும்.

ஆரம்பகாலத்தில் பூந்தான் ஜோசப் அவர்களுடைய கூத்துக்களில் பிரான்சிஸ் ஜெனம் நடித்தார். அவருடைய ஞானசவுந்தரி நாடகத்தில் பெண் வேடம் தாங்கி நடித்தார். அவரோடு சேரந்து பல கூத்துக்களில் நடித்தார். பூந்தான் ஜோசப் பற்றி திருமதி பிரான்சிஸ் ஜெனம் அடிக்கடி பேசுவார். பூந்தான் தான் இவரின் அடித்தளம்.

பிரான்சிஸ் ஜெனம் யாழ். நாடக அரங்கக் கல்லூரியில் ஆட்டமும் பாட்டும் பயின்றவர். இவர் யாழ் சில்லாவையை பிறப்பிடமாகக் கொண்டவர். ரோமன் கத்தோலிக்க பாடசாலை உட்பட பல கிறிஸ்தவ பாடசாலைகளிலே பயின்றவர். நல்ல குணவாளன். புடம்போடப்பட்ட தங்கம். இவரின் துணைவியாரும் கிறிஸ்தவ பாங்கான குடும்பப் பெண். மிகவும் பொறுப்பானவர். இவரின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமகன் எல்லோரும் மிகவும் நல்லவர்கள். பிரான்சிஸ் ஜெனம் இளம் வயதான தன் மகளை விபத்தொன்றில் இழந்தபோது ஆறாத்துயருள் ஆட்பட்டார். எனக்கும் அது மாறாத துயரத்தை தந்தது.

திருமறைக் கலாமன்றம் நடத்தும் திருப்பாடுகளின் காட்சியில் தொடர்ச்சியாக நடித்தவர். என் இனிய அன்புக்குரிய நண்பர். சொல்லும் செயலும் ஒன்றாய் வாழ்ந்தவர். கோபப்படத் தெரியாதவர். என்னுடைய உலக சாதனைப் பேச்சுக்கு நடுவராக இருந்தவர்.




பத்து வயதில் பாடசாலை நாடகங்களில் நடிக்கத் தொடங்கிய இவர் தனது பார்வை குறையும்வரை நடித்தவர். பொறுத்தது போதும், கோடை, எந்தையும் தாயும், சங்காரம், அபசுரம் என்பன இவருக்கு புகழ் சேர்த்த நாடகங்களில் சில. 1980களில் 'பொறுத்தது போதும்' இவருக்கு சிறந்த நடிகருக்கான கலைக்கழகப் பரிசினைப் பெற்று கொடுத்தது.

பிரான்சிஸ் ஜெனம் அவர்கள் மஹாகவியின் கோடை நாடகத்தில் மாணிக்கமாக நடித்தார். நான் முருகப்புவாக நடித்தேன். யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கண்ணனின் இசையோடு நாடகம் நடந்தது. இதன் நெறியாளர் தாசிசியஸ் அவர்கள். ஏ.ரி. பொன்னுத்துரை, ஆனந்தராணி, 'புழுகர் பொன்னையா' கணேசபிள்ளை போன்ற முன்னணிக் கலைஞர்கள் அதில் நடித்திருந்தார்கள். என்னுடைய நினைவு சரியாகவிருந்தால் இது 1978ல் நடந்தது.

'எந்தையும் தாயும்' நாடகத்தில் பெரியய்யாவாக பிரான்சிஸ் ஜெனம் சக்கைப்போடு போட்டார். இவரைப்போல நான் பெரியய்யாவாக நடித்து கலைக்கழக சிறந்த நடிகருக்கான பரிசை பின்னாளில் பெற்றுக் கொண்டேன். 'எந்தையும் தாயும்' நாடகத்தின் இன்னுமொரு மேடையேற்றத்தின்போது பிரான்சிஸ் ஜெனம் அவர்கள் பெரியய்யாவாகவும் நான் செல்வரத்தினமாகவும் நடித்தோம். அரசய்யா(அரசு) இதன் நெறியாளர். ஔவை, சானாவின் பேரன், திருமதி கலா தேவராஜா, சட்டத்தரனி சோ. தேவராஜா ஆகியோரும் நடித்திருந்தார்கள்.

எல்லோரையும் ஏசுகின்ற அரசய்யா அவர்கள் ஜெனம் என்றவுடன் மௌனம் சாதிப்பார். பிரான்சிஸ் ஜெனத்திடம் அரசய்யாவுக்கு பெருமதிப்பு இருந்தது.

எந்தையும் தாயும் நாடகத்தில் பெரியய்யா இறக்கின்ற கட்டத்தில் ஜெனம் நடித்துக் கொண்டிருக்கின்றார். கட்டிலில் அமர்கின்றார். அவரின் கைத்தடி சரிந்து விழுகின்றது. கட்டிலிலிருந்து சாய்ந்து விழுகின்றார். ஜெனத்தின் மனைவி, மகள், பேரப்பிள்ளைகள் நாடகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். இந்தக்கட்டத்தில் அவரின் கடைசி பேத்தி அப்போது 5 வயதிருக்கும், அம்மப்பா என்று குளறி அழுதது இன்னும் நினைவில் இருக்கிறது.

பிரான்சிஸ் ஜெனம் வத்தளையில் மகள் வீட்டில் தங்கியிருந்தார். அப்போது நானும் வத்தளையில் எனது மகளுடன் தங்கியிருந்தேன். அடிக்கடி ஜெனத்தைச் சந்திப்பேன். நீண்ட நேரம் பேசிக்கொண்டிருப்போம். எழுந்து போகும்போது 'இன்னும் கொஞ்சம் இருந்துவிட்டுப்போம்' என்று கேட்பார்.

எந்தையும் தாயும் நாடக மேடையேற்றத்தில் நிகழ்ந்தது போலவே வத்தளை வீட்டில் அவரது கைத்தடி தவறி நிஜமாகவே நிலத்தில் வீழ்ந்துபோனார். இதன்பின் பேச்சற்று படுக்கையில் இருந்த அவர் ஒரு வாரத்தில் இறந்துபோனார்.

அவர் நினைவு என்றும் அழியாதது.



sanmuganathan@thaiveedu.com

# திருமறைக் கலாமன்ற...

90ம் பக்கத் தொடர்ச்சி...

அரங்க கல்லூரியுடன் இணைந்து ஒருவருட கால அரங்கியல் களப்பயிற்சிகளை திருமறைக்கலாமன்றம் நடத்தி அதன் பயிற்சியாளரைக் கொண்டு 1980ல் அ.தாசீசியஸ் எழுதி நெறிப்படுத்திய பெறுத்தது போதும் நாடகத்தினை மேடையேற்றினர். அந்நாடகத்தினை இப்பயிற்சிக்காக தயாரித்தனர். மிகச்சிறப்பாக அதனை நெறிப்படுத்தி பலரது பாராட்டுக்களையும் பெற்றார். இரண்டு நிறுவனங்களையும் இணைத்து அக்களப்பயிற்சியை செயற்படுத்தியவர் இவரே.

தொடர்ந்து 1992ம் ஆண்டில் திருமறைக் கலாமன்றம் நாடகப்பயிலகம் என்னும் பிரிவினை உருவாக்கி ஒரு வருட நாடக பயிற்சிநெறியாக அதனை நடத்தத் தொடங்கியது. அதன் முதல் பயிலகத்திற்கு பிரதான பயிற்சியாளனாக ஜெனம் அவர்கள் இருந்து மாணவர்களுக்கு பயிற்சி அளித்தார். இக்கட்டுரை ஆசிரியர் உட்பட 12 பேர் அப்பயிற்சிப் பிரிவில் இடம்பெற்றிருந்தனர். அவர்களுக்கென புத்தாக்க முறையில் அவர் உருவாக்கிய நாடகம் நெஞ்சக்கனவல். புத்தளிப்பு முறையில் செய்து பார்த்து அதனை அவர் உருவாக்கினார். பின்னர் அதில் வருகின்ற நீதிமன்றக்காட்சிகளை குழந்தை ம. சண்முகலிங்கம் எழுதினார். ஜெனம் அவர்களின் நெறியாள்கையில் அதி உச்ச வரவேற்பினைப் பெற்ற நாடகமாக அது காணப்பட்டு 25 மேடைகளுக்கு மேல் அது மேடை கண்டது.

1995க்குப் பின்னர் இடப்பெயர்வுடன் கொழும்பு சென்ற ஜெனம் அவர்கள் கொழும்பு திருமறைக் கலாமன்றத்துடன் இணைந்து செயற்பட்டார். அங்கு மட்டுமன்றி வவுனியா, மன்னார், புத்தளம் போன்ற மன்றத்தின் கிளைகளில் தொடர்சியான பயிற்சியாளனாக இருந்தார். அங்கெல்லாம் திருமறைக்கலாமன்றம் இன்றும் இருக்கின்றது என்றால் அவர் வழங்கிய பயிற்சிகளினால் கவரப்பட்டு, நாடகத்துறையுடன் ஒட்டிக்கொண்டோராலேயே. கொழும்பு மன்றத்தின் ஆரம்பத்தில் அம்மன்றத்தின் கலைஞர்களைக் கொண்டு பலிக்களம் திருப்பாடுகளின் காட்சியை நெறிப்படுத்தினார். அதனை மன்னார், வவுனியா போன்ற பல இடங்களிலும் மேடையேற்றினார்.

குழந்தை ம.சண்முகலிங்கத்தினைக்கொண்டு இவர் எழுதிய கூத்துவடிவ நாடகமாகிய எதிர்கொள்ளக் காத்திருத்தல், மஹாகவியின் புதியதொரு வீடு, மரியசேவியர் அடிகளின் களங்கம், கவிஞர் சிவசேகரம் அவர்களின் கூத்துவடிமாகிய கெக்குளோ இராசன் வழக்கு தீர்த்த கதை, கவிஞர் முருகையனின் இரு துயரங்கள், திருமறைக்கலாமன்றம் உருவாக்கிய வார்த்தைகளற்ற நாடகப் பாரம்பரியத்தில் இவர் உருவாக்கிய கயிறு (The Rope) போன்ற பல நாடகங்களை நெறிப்படுத்தினார். இதில் புதியதொருவீடு, களங்கம் போன்ற நாடகங்கள் கொழும்பில் மட்டுமன்றி மன்னார், வவுனியா, புத்தளம், திருகோணமலை போன்ற பல இடங்களில் மேடையேற்றப்பட்டன.

1999ம் ஆண்டு புத்தளம் திருமறைக்கலா மன்றத்தில் தனியே 80 பெண் பிள்ளைகளிற்கு பலிக்களம் திருப்பாடுகளின் காட்சியை பயிற்றுவித்து, முதன்முதலாக பெண்கள் நடிக்கின்ற பாடுகளின் நாடகத்தினை நெறிப்படுத்தி ஒரு பெரிய சாதனையைத் தோற்றுவித்தார் எனலாம்.

அவரிடம் காணப்பட்ட மற்றுமொரு அம்சம் நடிகர்களிடம் என்ன திறமைகள் இருக்கின்றனவோ அவற்றினை பயன்படுத்திவிடுவார். நெஞ்சக்கனவல் நாடகம் நெறிப்படுத்திய வேளை நாடகப்பயிலக மாணவர்களுக்கு யோகப் பயிற்சிகளும் நடைபெற்றுக்கொண்டிருந்தன. தெரிந்த யோக நிலைகளை நாடகத்தின் ஒரு முக்கிய காட்சியாக்கிவிட்டார். எப்போதுமே ஒரு ஜனநாயகம் மிக்க நாடகப் போக்கு அவரிடம் காணப்படும். அதுமட்டுமன்றி நாடகப் பட்டறைகளிலும், ஒத்திகைகளிலும் ஒரு உயிர்ப்புமிக்க கலைஞனாகத் திகழ்வார். இறுதிக்காலங்களில் கண்பார்வை குறையத்தொடங்கிய சூழலில் மெதுவாக ஒரு முதியவரைப் போல நடந்து வருவார். நாடகப்பட்டறை ஆரம்பமாகியதும் இளைஞனாக மாறிவிடுவார். பயிலுனர்கள் அசந்து போய்விடுவார்கள். அவர் ஆடுகின்ற போது அதில் இருக்கின்ற லாவகமும் அழகும் வேறு எந்தக் கலைஞர்களுக்கும் வராது என்றே கூறலாம். இவற்றினைவிட அவரிடம் காணப்பட்ட நகைச்சுவை அபரிதமானது. ஓய்வான நேரங்களிலும் பயணங்களிலும் எப்போதும் நகைச்சுவையாகவே உரையாடுவார். அவர் நிற்கின்ற சூழல் எப்போதும் கலகலத்துக்கொண்டே இருக்கும்.

## நிர்வாகியாக:

திருமறைக்கலாமன்றத்தில் பிரான்சிஸ் ஜெனம் தனியே நடிகனாகவோ, நெறியாளனாகவோ மட்டும் செயற்படவில்லை. இயக்குநர் நீ. மரியசேவியர் அடிகளின் நம்பிக்கைகுரிய நிர்வாகியாகவும் இருந்தார். யாழ்ப்பாணத்தில் இருக்கும்போது செயலவை உறுப்பினராகவும், 18 வருடங்களுக்கு மேல் மன்றத்தின் பெருளாளராகவும் பணியாற்றினார். கொழும்பு திருமறைக் கலாமன்றத்தில் அவர் நிர்வாக அலுவலராக இருந்து பல்வேறு பொறுப்புமிக்க நிர்வாகப் பணிகளை ஆற்றினார்.

அவர் கொழும்பில் பணியாற்றிய காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து பலரும் தலைநகருக்கு வருவதில் பலவேறு இடர்பாடுகள் இருந்த சூழல். அக்காலப்பகுதியில் மன்னார், வவுனியா, புத்தளம், திருகோணமலை, மட்டக்களப்பு, அப்புத்தளை... என ஒவ்வொரு மன்றங்களையும் நீண்ட பயணஞ் செய்தல்களினூடாக தரிசித்து அவர்களின் பணிகளை ஊக்குவிக்கின்ற செயற்பாடுகளை மிகவும் அர்ப்பணிப்போடு செய்தார். கலையை பணம் சம்பாதிக்கும் ஊடகமாக எந்தக்காலத்திலும் கொள்ளாது சேவை மனப்பாங்கோடு இயங்கினார். 2005ம் ஆண்டுவரை கொழும்பு மன்றத்தில் பணியாற்றினார். அவரது இரண்டு கண்களும் பார்வையற்றுப் போனதன் பின்னரே வீட்டோடு ஓய்ந்திருந்தார்.

ஈழத்தின் நாடக வரலாற்றில் மட்டுமன்றி திருமறைக் கலாமன்றத்தின் வரலாற்றிலும் நின்று நிலைக்கின்ற அற்புதமான கலைஞனாக திருமறைக்கலாமன்றத்தின் அதியுயர் விருதான 'கலைஞான பூரணன்' விருதினைப் பெற்று மன்றத்தின் இயக்குநர் நீ. மரியசேவியர் அடிகளின் மனதிலும் அங்கத்தவர்கள் மனதிலும் உயர்ந்து நிற்கின்றார். அவரால் உருவாக்கப்பட்ட கலைஞர்கள் பலர் இன்றைய திருமறைக்கலா மன்றத்தின் கலைச் செயற்பாடுகளில் முன்னின்று ஈடுபடுகிறார்கள். அந்தவகையில் அவர் வாழுகின்றார்! இனியும் வாழ்வார்!!

■ ■ ■